05th
MAY
2026

www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 107 | பக்கங்கள் - 17 | editor.uthayam@gmail.com

## உழ்ஹிய்யாவை நிறைவேற்றுவது தொடர்பில் ஜம்மியதுல் உலமாவின் தெளிவூட்டல்

இலங்கையில் அமுலில் உள்ள 1971ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க

02ம் பக்கம்பார்க்க...



# தமிழக முதல்வராக விஜய் 7ஆம் திகதி பதவியேற்பு?

## நாளை ஆளுனருடன் சந்திப்பு




### நேரு அரங்கில் பிரமாண்ட ஏற்பாடு

தமிழக வெற்றிக்கழகத் தலைவர் விஜய் முதலமைச்சராக பதவியேற்க திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்தப் பதவியேற்பு விழாவானது எதிர்வரும் (7.5.2026) அன்று சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் மிகப்பிரம்மாண்டமாக நடைபெறவுள்ளதாக

02ம் பக்கம்பார்க்க...

## வர்த்தமானியில் வெளியாகியுள்ள புதிய வெட் வரி திருத்தங்கள்

### சிறிய வியாபாரிகளும் வரி செலுத்தும் நிர்ப்பந்தம்

இலங்கையில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) தொடர்பான முக்கிய திருத்தங்களை உள்ளடக்கிய புதிய சட்டமூலம் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க ஏயுவு சட்டத்தைத் திருத்தும் இந்த முன்மொழிவு, நிதி, திட்டமிடல்

03ம் பக்கம்பார்க்க...

## வெசாக் வாரத்தில் உழ்ஹிய்யாவை நிறைவேற்றல்!

விரைவில் கஸெட் வெளியாகும்! அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ!!

## இலங்கை மாலைதீவுக்கிடையில் 7 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்



மாலைதீவு மற்றும் இலங்கைக்கு இடையே பல்வேறு துறைகள் தொடர்பான 07 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறிக் கொள்ளும் நிகழ்வு, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மற்றும் மாலைதீவு

03ம் பக்கம்பார்க்க...

## மினா ஏற்பாடுகள் குறித்து தூதுவர் அமீர் அஜ்வத் கள ஆய்வு



2026 ஹஜ் யாத்திரை தொடங்கிய நிலையில், மினாவில் உள்ள ஏற்பாடுகளைத் சவுதிக்கான இலங்கைத் தூதர் அமீர் அஜ்வாட் நேரடியாக சென்று ஆய்வு

02ம் பக்கம்பார்க்க...

## கச்சதீவை மட்டுமல்ல யாழ்ப்பாணத்தையும் தமிழகத்துக்கு வழங்க வேண்டும்



### அர்ச்சுனா எம்.பி. பாராளுமன்றில் அதிரடி கருத்து!

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய், கேட்டது போல கச்சத்தீவை

04ம் பக்கம்பார்க்க...

## ஹக்கீம் நிஸாம் காரியப்பரை மு.கா.எம்.பீககளாக அங்கீகரிக்கவும்.பாராளுமன்ற செயலாளரிடம் கோரிக்கை!



உயர் நீதிமன்ற சட்ட நடவடிக்கைகளின் நிறைவைத் தொடர்ந்து,

02ம் பக்கம்பார்க்க...

## திறமையும் தகுதியும் உள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அரசில் இடம்



### தொலைக்காட்சி நேர்காணலில் அமைச்சர் பிமல் ரத்னாயக

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் திறமையான

02ம் பக்கம்பார்க்க...

## சுயாதீன நீதித்துறையில் ஜனாதிபதி தலையீடு

### சஜித் குற்றச்சாட்டு!

தற்போதைய அரசாங்கம் நாட்டு மக்களின் பொருளாதார, சமூக, அரசியல் உரிமைகளை இல்லாதொழித்து வருகின்றது. VAT வரி வலையை விரிவுபடுத்தி மக்களை துயரத்துக்கும், அசௌகரியத்துக்கும், வறுமைக்கும் வேதனையின்

02ம் பக்கம்பார்க்க...

## பலஸ்தீனுக்கான இலங்கைப் பிரதிநிதி பௌசர் - அமைச்சர் விஜித சந்திப்பு



ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் திறமையான தகுதியான உறுப்பினர்களுக்கு

02ம் பக்கம்பார்க்க...





உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## உழ்ஹிய்யாவை..
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

விடுமுறைச் சட்டம் மற்றும் தொடர்புடைய விதிகளின்படி மிருகங்களை அறுத்தல் மற்றும் மாமிச விற்பனையில் ஈடுபடல் தொடர்பான கட்டுப்பாடானது, குறிப்பாக பௌர்ணமி போயா நாளுக்கு மட்டுமே பொருந்தும். அது மே மாதம் 30ஆம் தேதி சனிக்கிழமை வருகிறது. அந்தத் தினத்துக்கு முன்போ அல்லது பின்போ உழ்ஹிய்யா கடமையை செய்வதற்கு சட்ட ரீதியான தடை எதுவும் இல்லை. எனினும், கலாச்சார ரீதியாக வெசாக் காலம் போயா நாளுடன் விரிவுபடுத்தப்படலாம்.

ஹஜ்ஜுப் பெருநாளுடன் தொடர்புடைய சமய கிரியைகள் மற்றும் வழிபாட்டு முறைகள் குறித்து, அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா கடந்த 23.04.2026ஆம் திகதி கடித மூலமாக அதிமேதகு ஜனாதிபதி, புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகார அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சருடன் முறையாக தொடர்பு கொண்டுள்ளது.

இதேவேளை, அரசாங்கத்தின் மிக முக்கிய முஸ்லிம் பிரதிநிதியான, சமய மற்றும் கலாச்சார விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் அவர்கள் கடந்த 26.04.2026 இல், போயா நாள் தவிர்ந்த பிற நாட்களில் உழ்ஹிய்யா கடமையை செய்வதற்கு எவ்வித தடையும் இல்லை என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

மேலும், அனைத்து சமூகங்களின் மத உரிமைகள் மற்றும் வழிபாட்டு முறைகள் மதிக்கப்படும் என்றும், அதே சமயம் அமைதியான சகவாழ்வு மற்றும் தேசிய ஒற்றுமை முக்கியம் எனவும் அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

ஒவ்வொரு வருடமும் ஹஜ்ஜுப் பெருநாள் காலங்களில் போயா தினம் வருவது தவிர்க்க முடியாத ஒன்றாகும் அந்தந்த காலங்களில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சம்பந்தப்பட்டவர்களோடு தொடர்புகளை ஏற்படுத்தி போயா தினம் தவிர்ந்த தினங்களில் உழ்ஹிய்யா கொடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்ததை ஞாபகப்படுத்துவதுடன், இம்முறையும் உழ்ஹிய்யா கிரியைகளை சுமுகமாக செய்வதற்கு எம்மாலான சகல முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம் என்பதையும் தெரிவிக்கிறோம்.

எனவே, பல்லின சமூகம் வாழும் எமது நாட்டில் காலாகாலமாக அறிவுபூர்வமாகவும், உணர்வு பூர்வமாகவும், கௌரவமாகவும் ஏனைய சமூகங்களுடன் இணைந்து வாழும் முஸ்லிம் சமூகம் தொடர்ந்தும் அதனைக் கடைப்பிடித்து நமது உயர் கௌரவத்தைக் காத்து நடந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

இன்ஷா அல்லாஹ், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா தொடர்ந்தும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி, தேவையான தகவல்களை முஸ்லிம் சமூகத்துக்கு அவ்வப்போது தெரிவிக்கும் என்பதையும் அறியத்தருகின்றோம் - என அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் பதில் தலைவர் அஷ்-ஷைக் ஏ.எல்.எம். ரிழா, பொதுச் செயலாளர் அஷ்-ஷைக் எம். அர்கம் நூராமித் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹக்கீம்..
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம் மற்றும் நிஸாம் காரியப்பர் ஆகியோர் பாராளுமன்றத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC) பிரதிநிதிகளாக உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் அதன் செயலாளர் நிஸாம் காரியப்பர் ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட உயர்நீதிமன்ற ரிட் மனு (SC Writ Application No. 70/2025) நிறைவடைந்ததைத் தொடர்ந்து இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றக் கட்டமைப்பிற்குள் தம்மை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராக உத்தியோகபூர்வ அங்கீகாரம் பெறுவது சம்பந்தமாக கட்டளையை கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற நீதிமன்ற விசாரணைகளின் போது பின்வரும் முக்கிய விடயங்கள் உறுதிப்படுத்தப்பட்டன:

கூட்டணி குறித்த அறிவித்தல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி (SJB) ஆகியவற்றுக்கு இடையிலான அரசியல் கூட்டணி குறித்த விபரங்கள் உட்பட தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் நிஸாம் காரியப்பர் செயலாளரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அங்கத்தவர்கள் என்று ஏற்கனவே பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு நீதிமன்றத்தில் உறுதிப்படுத்தியது.

தேவையான தகவல்கள் ஏற்கனவே பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளதால், இது குறித்து மேலதிக விசாரணைகள் அவசியமில்லை என நீதிமன்றம் தீர்மானித்தது.

இதனைத் தொடர்ந்து குறித்த மனுவின் கோரிய நிவாரணம் பெறப்பட்டிருப்பதனால் இந்த மனு தொடர்ச்சியாக வைத்துக்கொள்ள தேவை இல்லை என்ற அடிப்படையில் தள்ளுபடி செய்யப்பட்டதுடன், சட்ட ரீதியான நடவடிக்கைகள் நிறைவுக்கு வந்தன.

தேர்தல் ஆணைக்குழுவின் உறுதிப்படுத்தலைத் தொடர்ந்து, ரவூப் ஹக்கீம் மற்றும் நிஸாம் காரியப்பர் ஆகியோர் இன்று பாராளுமன்ற செயலாளர் நாயகமிடம் உத்தியோகபூர்வ கோரிக்கைக் கடிதம் ஒன்றை கையளித்தனர்.

## தமிழக..
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

குறிப்பிடப்படுகின்றது.

இந்தநிலையிலே, நாளை (6) காலை ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகரை சந்திக்க நேரம் கேட்டுள்ள விஜய், ஆளுநரை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோர உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## கச்சதீவை...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

மட்டுமல்ல யாழ்ப்பாணத்தையும் சேர்த்து தமிழ்நாட்டிடம் இந்த அரசாங்கம் கொடுக்க வேண்டும் என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்துள்ளார்.

தற்போது நடைபெற்று வரும் நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அத்துடன், தமிழக சட்டசபைத் தேர்தலில் வெற்றியீட்டியுள்ள தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய்க்கு சபையில் வைத்து, அர்ச்சுனா எம்.பி வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் இதயத்தை கவர்ந்த, தமிழ் நாட்டின் புதிய முதலமைச்சர் விஜய்க்கு, ஒரு அடக்கப்பட்ட தமிழன் என்ற வகையில் எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

வடக்கில், உள்ள தீவுப்பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படுவதில்லை என்பது மிக முக்கிய குற்றச்சாட்டாக உள்ளது. குறிப்பாக நெடுந்தீவு பகுதியில் உள்ள குடும்பங்களில் பாதிக்கு பாதி மக்களுக்கு மின்சாரம் இல்லை. ஒரு வாரத்தில் கிட்டத்தட்ட 5 நாட்களில் மின்சாரம் தடைப்படுகின்றது. தீவுப் பகுதிகளில் இது பாரிய பிரச்சினையாக உள்ளது.

கச்சத்தீவை, விஜய் கேட்டார் என்ற போது அதனை தர முடியாது என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்திருந்தார். ஆனால், நாங்கள் கூறுகின்றோம் கச்சத்தீவை மாத்திரம் அல்ல, முழு யாழ்ப்பாணத்தையும் தமிழகத்திற்கு எழுதிக் கொடுங்கள். தமிழ் நாட்டு மக்கள் எங்களைப் பார்த்துக் கொள்வார்கள் என குறிப்பிட்டுள்ளார்.

## பலஸ்தீனுக்கு..
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

எதிர்காலத்தில் பொறுப்புகள் வாய்ப்புக்களைவழங்க அரசாங்கம் தயாராக உள்ளதாக அமைச்சர் பிமல் ரத்னாயக தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கட்சிக்கு முன்னுரிமை வழங்குவதை விட நாட்டின் முன்னேற்றமே அரசின் நோக்கமென்றும் அதற்காக எதிர்கட்சிகளில் உள்ள தகுதியும் திறமையும் உள்ளவர்களை அரசில் இணைத்துக் கொள்வதில் அக்கறை கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மினா...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

செய்துள்ளார்.

ஹஜ் யாத்திரை மேற்கொள்ளும் 3500 இலங்கை யாத்ரீகர்களுக்காக மினா தளங்களின் செயல்பாட்டு ஏற்பாடுகளைத் தூதர் ஆய்வு செய்தார்.

சவூதி அதிகாரிகள், பங்காளர்கள், இலங்கை ஹஜ் தூதுக்குழுவுடன் நெருக்கமாகப் பணியாற்றுவதில் ரியாத்தில் உள்ள இலங்கைத் தூதரகம் மற்றும் ஜித்தாவில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகம் ஆகியவற்றின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை தூதுவரின் இந்த விஜயம் மேலும் வலுப்படுத்தும்.

## திறமையும்..
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**


தகுதியான உறுப்பினர்களுக்கு எதிர்காலத்தில் பொறுப்புகள் வாய்ப்புக்களைவழங்க அரசாங்கம் தயாராக உள்ளதாக அமைச்சர் பிமல் ரத்னாயக தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கட்சிக்கு முன்னுரிமை வழங்குவதை விட நாட்டின் முன்னேற்றமே அரசின் நோக்கமென்றும் அதற்காக எதிர்கட்சிகளில் உள்ள தகுதியும் திறமையும் உள்ளவர்களை அரசில் இணைத்துக் கொள்வதில் அக்கறை கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



# சிறப்பாக நடைபெற்ற அல் - மன்ஹஜுஸ் ஸஹீஹ் நூல் வெளியீட்டு விழா!






அல்குர்ஆன் மற்றும் ஸுன்னாவின் அடிப்படையில் இஸ்லாத்தைப் பற்றிய சரியான புரிதலை வலுப்படுத்தவும் ஒற்றுமையை மேம்படுத்தும் நோக்கில் எழுதப்பட்ட "அல் மன்ஹஜுஸ் ஸஹீஹ்" நூல் உத்தியோகபூர்வ வெளியீட்டு விழா கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (02) நடைபெற்றது.

இந்நிகழ்வில் அதிதிகளாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ்.உதுமாலெப்பை, பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.எம். தாஹிர், காதர் மஸ்தான், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ஹுனைஸ் பாருக், அனைத்து மாவட்டங்களிலிருந்து வருகை தந்த நிர்வாகிகள், மார்க்க அறிஞர்கள், உலமாக்கள், வர்த்தகர்கள், தொழிலதிபர்கள் என 2000க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## குருசாமியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் உத்தரவின் பேரில் வெளியிடப்பட்டுள்ளது.

**வரி விகித உயர்வு**

புதிய திருத்தங்களின் கீழ், நிதிச் சேவைகளுக்கு விதிக்கப்படும் VAT விகிதம் 18% இலிருந்து 20.5% ஆக உயர்த்த முன்மொழியப்பட்டுள்ளது. இந்த மாற்றம் 2026 ஜூலை 1 முதல் அமுலுக்கு வரும்.

VAT பதிவு எல்லை மாற்றம்

VAT பதிவுக்கான வருடாந்த விற்றுமுதல் எல்லைகளும் திருத்தப்பட்டுள்ளன. ஒரு வரிக்குட்பட்ட காலப்பகுதியில் 9 மில்லியன் ரூபாயை மீறும் விற்றுமுதல் அல்லது வருடாந்த மொத்த விற்றுமுதல் 36 மில்லியன் ரூபாயை மீறும் வணிகங்கள் 2026 ஜூலை 1 முதல் கட்டாயமாக VAT பதிவு செய்ய வேண்டியுள்ளது.

(ஒரு நாளைக்கு 500 ரூபா பொறுமதியான 200 சோறு பார்சல்களை விற்கும் சிறிய ஹோட்டல்கள் முதல் ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் வியாபரம் செய்யும் சில்லாறை கடைகளிம் இனி வெட் வரி செலுத்த வேண்டும்.)

**டிஜிட்டல் சேவைகள் மீது கவனம்**

மின்னணு தளங்கள் மூலம் வழங்கப்படும் சேவைகளுக்கான ஏயுவு விதிமுறைகள் 2026 ஜூலை 1 வரை நீட்டிக்கப்பட்டுள்ளதுடன், டிஜிட்டல் சேவைகள் பதிவு மற்றும் வரி செலுத்துதல் தொடர்பான புதிய சட்ட அத்தியாயமும் சேர்க்கப்பட்டுள்ளது.

**வரி நிர்வாகத்தில் மாற்றங்கள்**

வரி வசூல் மற்றும் கணக்கியல் செயல்முறைகளை மேம்படுத்துவதற்காக விற்பனை முனைய இயந்திரங்கள் (POS) பயன்பாட்டுக்கு புதிய விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், ஏயுவு கணக்கீட்டின் போது உள்ளூராட்சி மன்றங்கள் வசூலிக்கும் பொழுதுபோக்கு வரியை கழிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**கடுமையான தண்டனைகள்**

தவறான தகவல்களை வழங்கி வரி மீளப் பெற முயற்சிக்கும் நபர்களுக்கு எதிரான அபராதங்கள் மற்றும் சட்ட நடவடிக்கைகள் கடுமையாக்கப்பட்டுள்ளன.

**SVAT முறை நீக்கம்**

முன்னர் நடைமுறையில் இருந்த எளிமையாக்கப்பட்ட VAT (SVAT) முறைமை நீக்கப்படுவதற்கான ஏற்பாடுகளும் புதிய திருத்தங்களில் அடங்கியுள்ளன.

இந்த திருத்தங்கள், வரி வசூல் திறனை மேம்படுத்துவதோடு, நாட்டின் பொருளாதார மேலாண்மையை வலுப்படுத்தும் நோக்கத்துடன் கொண்டு வரப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி கலாநிதி முகமது முய்சு (Dr. Mohamed Muizzu) ஆகியோர் முன்னிலையில் நேற்று (04) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

மாலைதீவு - இலங்கை உறவுகளில் ஒரு புதிய அத்தியாயத்தைக் குறிக்கும் வகையில் சுகாதாரம், விளையாட்டு, சுற்றுலா, கல்வி மற்றும் பாதுகாப்பு ஆகிய துறைகளில் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

அதன்படி,

01. இலங்கைச் ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மாலைதீவு குடியரசுக்கும் இடையில் சுற்றுலாத்துறையில் ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம், மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் இர்திஷாம் ஆதம் (Iruthisham Adam) மற்றும் வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோரினால் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

02. இலங்கை தேசிய ஆவணக்காப்பகத் திணைக்களத்திற்கும் மாலைதீவு தேசிய ஆவணக்காப்பகத்திற்கும் இடையில் ஆவணக்காப்பக ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம், மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் இர்திஷாம் ஆதம் (ஐசரவாளைாயஅ யுனயஅ) மற்றும் வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோரினால் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

03. மாலைதீவு குடியரசின் கல்வி, உயர்கல்வி மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சுக்கும், இலங்கையின் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கும் இடையில் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை தலைவர்களுக்கான பயிற்சி மற்றும் தொழில் அபிவிருத்தி தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் இர்திஷாம் ஆதம் (Iruthisham Adam) மற்றும் வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோரால் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

04. மாலைதீவு குடியரசுக்கும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசுக்கும் இடையில் விளையாட்டு மற்றும் இளைஞர் அபிவிருத்தி தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம், மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் இர்திஷாம் ஆதம் (Iruthisham Adam) மற்றும் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே ஆகியோரால் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

05. பாதுகாப்புத் துறை ஒத்துழைப்புக்காக, மாலைதீவு குடியரசின் தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையத்திற்கும், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பாதுகாப்பு அமைச்சிற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம், இலங்கையிலுள்ள மாலைதீவு உயர்ஸ்தானிகர் மசூத் இமாத் (ஆயளழழன ஐஅயன) மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வுபெற்ற) சம்பத் துயகொந்தா ஆகியோருக்கு இடையில் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

06. மாலைதீவு குடியரசின் பாதுகாப்பு மற்றும் தேசிய சேவை அமைச்சுக்கும், இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம், இலங்கையிலுள்ள மாலைதீவு உயர்ஸ்தானிகர் மசூத் இமாத் (ஆயளழழன ஐஅயன) மற்றும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் ரியர் அட்மிரல் தம்மிக்க குமாரவுக்கும் இடையில் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

07. இலங்கைச் ஜனநாயக சோசலிசக் குடியரசின் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கும், மாலைதீவு குடியரசின் சுகாதார, குடும்ப மற்றும் நலன்புரி அமைச்சுக்கும் இடையிலான கல்வி ஒத்துழைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம், இலங்கையிலுள்ள மாலைதீவு உயர்ஸ்தானிகர் மசூத் இமாத் (ஆயளழழன ஐஅயன) மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் இந்திக மகேஷ் கருணாதிலக்க ஆகியோரால் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

மாலைதீவு மற்றும் இலங்கைக்கு இடையிலான பொருளாதார, கலாசார மற்றும் சமூக உறவுகளை மேலும் வலுப்படுத்துவதையும், இரு நாடுகளுக்கும் இடையிலான பன்முகக் கூட்டாண்மையை உறுதிப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் அழைப்பின் பேரில் மாலைதீவு ஜனாதிபதி கலாநிதி முகமது முய்சு (னுச ஆழாயஅநன ஆரணைணர) இந்நாட்டுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சரவை அமைச்சர்கள், அமைச்சுகளின் அதிகாரிகள் உள்ளிட்ட மாலைதீவு தூதுக்குழுவினர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2026 MAY 05 - TUESDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# உழ்ஹிய்யா விவகாரத்தில் அரச அணுகுமுறை சரியானதா?

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவிக்கு வருவதற்காக முஸ்லிம்கள் பாரிய அளவில் பங்களிப்பு செய்தனர். இலங்கை அரசியல் வரலாற்று நெடுகிலும் வழக்கமாக ஐக்கிய தேசிய கட்சி போன்ற வலதுசாரி கட்சிகளின் பக்கம் சார்ந்த முஸ்லிம்கள், இந்த தடவை ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்ற மற்றும் உள்ளூர் ஆட்சி தேர்தல்களில் தேசிய மக்கள் சக்திக்கு பெருவாரியாக வாக்களித்தனர்.

இக்கட்சியின் கொள்கை கோட்பாடுகளை நன்கு விளங்கியோ கம்யூனிச சித்தார்த்தங்களை படித்தோ இந்த மாற்றம் ஏற்படவில்லை. முன்னைய ஆட்சி காலங்களில் ஏற்பட்ட இனவாத கெடுபிடிகள் பாகுபாடுகள் பாரபட்சமான அணுகுமுறைகள் முஸ்லிம்களை கட்சியின் பக்கம் சாய வைத்தன எனலாம். ஏனைய இனங்களைப் போன்று தாமும் கௌரவமாக நடத்தப்பட வேண்டும், இனவாத கெடுபிடிகளில் இருந்து விடுபட்டு நிம்மதியாக வாழ வேண்டும் என்பதே முஸ்லிம் சமூகத்தின் எதிர்பார்ப்பாக இருந்தது .இந்த அரசாங்கம் பதவியேற்ற போது வரலாற்றில் முதல் தடவையாக முஸ்லிம் ஒருவர் அமைச்சரவையில் உள்வாங்கப்படாமையானது, முஸ்லிம்கள் இந்த அரசின் மீது வைத்திருந்த நம்பிக்கைக்கும் நல்லெண்ணத்திற்குமான முதலாவது அடியாக அமைந்தது.

அமைச்சரவை நியமனங்கள், அமைச்சரவை செயலாளர்கள் நியமனங்கள் , உள்நாட்டு வெளிநாட்டு உயர் பதவி நியமனங்கள் போன்றவற்றில் பாரபட்சம், இஸ்ரேலின் நலன்களை மையப்படுத்தி பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் அநீதியான கைதுகள் என கசப்பான விடயங்கள் தொடர்ந்து இந்த அரசின் செயற்பாடுகளை மென்மேலும் சந்தேகக் கண் கொண்டு பார்க்க வைத்தன. இந்த வரிசையில் ஹஜ் பெருநாள் உழ்ஹியா விவகாரமும் சூடு பிடித்துள்ளது.

இம்முறை ஹஜ் பெருநாள் மற்றும் அதை தொடர்ந்து ஐயாமுல் தஷ்ரீக் தினங்கள் அரசாங்கம் புதிதாக பிரகடனப்படுத்திய வெசாக் வாரத்துக்குள் உள்ளடங்குவதால், இந்த நாட்களில் உழ்ஹியா கடமையை நிறைவேற்றுவது தொடர்பாக அமைச்சரவை ஊடகவியலாளர் மாநாட்டில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ பின்வரும் கருத்துக்களை கூறினார்.

“புத்தசாசன விவகாரங்கள் அமைச்சர் முப்பீட மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து இந்த விடயங்கள் சம்பந்தமாக கலந்துரையாடவுள்ளார். அதன் பின்னரே இது குறித்த அரசாங்கம் தனது நிலைப்பாட்டை அறிவிக்கும் ” என்றார்.

இந்த நிலைப்பாடானது மோசமான பின் விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது. எந்த ஒரு அரசாங்கமும் முன்னெடுக்காத ஒரு தவறான அணு முறையை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுத்து இருப்பது ஆச்சரியமானதாகும்.

இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் தனது மதம் மற்றும் கலாச்சாரத்தைப் பின்பற்றுவதற்கான சுதந்திரம் அரசியலமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அது யாருடைய தயவிலும் தங்கியிருக்க வேண்டிய ஒன்றல்ல.

ஒருவரது மத அனுஷ்டானங்கள் மற்றுமொருவருக்கு இடையூறாக அமைய முடியாது என்பது சட்டத்தின் அடிப்படையாகும். அதேபோல் ஒரு சமூகத்தின் உரிமைகளைத் தீர்மானிக்கும் அதிகாரம் மதத் தலைவர்களிடம் இல்லை என்பதும் உண்மை.

அப்படியிருக்க, ஒரு சமூகத்தின் அடிப்படை உரிமைகளைத் தீர்மானிப்பதற்கு அரசாங்கம் மகாநாயக்க தேரர்களின் கருத்துக்களுக்காகக் காத்திருக்க வேண்டுமானால், இந்த நாட்டில் அரசியலமைப்பு எதற்கு? சட்டம் ஒழுங்கு எதற்கு? அரசாங்கம் எதற்கு? என்ற நியாயமான கேள்விகளை இந்த அரசாங்கத்திடம் கேட்க வேண்டி உள்ளது.

சட்டம் அனைவருக்கும் சமமானது என்றால், எமது உரிமைகளும் அதில் பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டும்!

இலங்கை வரலாற்றில் இதுவரை உத்தியோகபூர்வமாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்தவொரு அரசாங்கமும், அரசியலமைப்பை விடவும் மேலானதொரு அதிகார மையத்தை உருவாக்கியதில்லை.

அதேபோல், பிரஜைகளின் உரிமைகள் சார்ந்த முடிவுகளை எடுக்க யாரின் தயவையும் எதிர்பார்த்ததும் இல்லை. அப்படி ஒரு நிலை உருவானால், இங்கே சட்டத்திற்கும் நீதிக்கும் என்ன வேலை?

எமது பிரதானமான நிலைப்பாடும் வாதமும் உழ்ஹிய்யா அனுமதி வழங்கப்படுமா இல்லையா என்பது பற்றியது மட்டுமல்ல அந்த அனுமதியை அறிவிக்க அரசாங்கம் கையாளும் தவறான வழிமுறை பற்றியது.

முஸ்லிம்களின் வணக்க வழிபாடுகளோடு தொடர்புடைய இந்த உழ்ஹியா கிரிகைக்கு அனுமதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். ஆனால் அரசாங்கத்தின் அணுகுமுறைக்கு பின்னால் மறைந்துள்ள பாரதூரமான தூ ரநோக்கு ஆபத்தை எமது சமூகம் உணர வேண்டும்.

அதாவது, மக்களின் ஆணையைப் புறக்கணித்துவிட்டு, சட்டப்படியான வழிமுறைகளைத் தள்ளிவைத்துவிட்டு, அரசாங்கம் அறிந்தோ அறியாமலோ ஒரு புதிய மரபை உருவாக்கப் பார்க்கிறது.

எமது உரிமைகளை நாடாளுமன்றத்தில் பேசித் தீர்ப்பதற்குப் பதிலாக, இன்னொரு மத சாசனத்தின் காலடியில் சென்று கையேந்தி நிற்கும் நிலைக்கு எமது அரசியலமைப்பு வழங்கியுள்ள14-வது பிரிவின் உரிமைகள் தள்ளப்பட்டிருப்பது கவலைக்குரியது.

அரசியலமைப்பு வழங்கிய அடிப்படை உரிமைகளை, மதத் தலைவர்களின் விருப்பத்திற்கு உட்பட்டதாக மாற்றுவது என்பது மிகவும் ஆபத்தானது.

அரசாங்கம் சகல இனங்களின் உரிமையை பாதுகாப்பதற்கு ஆவண செய்ய வேண்டும். இனவாத சக்திகளை திருப்தி படுத்துவதற்காக வேண்டி மற்றும் குறுகிய அரசியல் இலாபங்களை பெற்றுக் கொள்வதற்காக வேண்டி இன்னொரு சமூகத்தை பாரபட்சமான முறையில் நடாத்தக் கூடாது.






## அர்ச்சுனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உச்சத்திற்கு கொண்டு சென்று கொண்டிருக்கின்றது. சிரேஷ்ட பிரஜைகளினது சேமிப்புகளுக்கு வழங்கப்பட்ட 15% வட்டியையும் குறைத்திருக்கும் நிலையில், நாட்டின் சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதியை நிலைநாட்டும் முறையை மீறி, நாட்டின் நீதித்துறையின் பிரதான ஊடகப் பேச்சாளராக ஜனாதிபதி மாறியுள்ளார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

- ஜனாதிபதி நீதித்துறையின் ஊடகப் பேச்சாளராக மாறிவிட்டார் போலும்,

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக சட்டவாக்கம், நிறைவேற்று அதிகாரம் மற்றும் நீதித்துறை ஆகிய மூன்று நிறுவனங்களுக்கு இடையிலான தடைகள் மற்றும் சமன்பாடு சரியாகப் பேணப்படுவதன் மூலம் ஜனநாயகத்தை பலப்படுத்த முடியும்.

இருப்பினும், நாட்டின் ஜனாதிபதி தற்போது நீதித்துறை செயற்பாடுகள் குறித்து எதிர்வுகூறல்களை முன்வைப்பதன் மூலமும், நீதித்துறையின் செயற்பாடுகள் குறித்து ஒரு பிரதான ஊடகப் பேச்சாளராகவும், வர்ணனையாளராகவும் செய்திகளை உருவாக்குபவராகவும் செயற்பட்டு வருகிறார். இது நீதித்துறையை அவமதிப்பதோடு, ஜனநாயகச் செயல்முறையை மீறி நீதித்துறையின் சுதந்திரத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

- இது ஜனநாயகத்திற்கும் நீதித்துறையின் சுயாதீனத்துக்கும் விடுக்கப்படும் பெரும் அடியாகும்.

ஜனாதிபதியின் இத்தகைய செயற்பாடானது நாட்டின் அரசியல் சுதந்திரம், ஜனநாயக உரிமை, நீதித்துறைச் செயல்முறை மற்றும் ஜனநாயகக் கட்டமைப்புக்கு விடுக்கப்பட்டுள்ள பாரிய அச்சுறுத்தலாகும். எனவே, மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள வரிச் சுமையை உடனடியாக நிறுத்தி, மக்களுக்கு நிவாரணங்களை வழங்கி, சிரேஷ்ட பிரஜைகளினது சேமிப்புகளுக்கான வட்டியை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நீதித்துறையில் தலையிடாமல் அதை வலுப்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். பல நீதிபதிகள் தங்களது பதவி உயர்வுகள் மற்றும் நியமனங்களுக்காகக் காத்திருக்கும் சூழலில், அரசாங்கம் அந்த நியமனங்களைக் கூட வழங்கவில்லை. நீதித்துறையை வலுப்படுத்தி ஜனநாயகத்தின் தூண்களான மூன்று அதிகார மையங்களின் அதிகாரங்களைப் பாதுகாப்பதும், இவற்றுக்கிடையிலான தடைகள் மற்றும் சமனபாடுகளையும் பாதுகாப்பதை விடுத்து, நீதித்துறை செயற்பாடுகள் குறித்து எதிர்வுகூறுபவராக ஜனாதிபதி செயற்படக்கூடாது என்று எதிர்ககட்சித் தலைவர் தெரிவித்தார்.

அவ்வாறே, நாட்டு மக்களின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக உரிமைகளை வலுப்படுத்தி, அவர்களின் வாழ்வுரிமையை உறுதிப்படுத்துவதோடு, ஒரு சிறந்த வாழ்க்கைத்தரத்தை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டும். இது ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தின் சமூக உடன்படிக்கையாக அமைந்து காணப்படுகின்றது. இந்த உடன்படிக்கையை மீற வேண்டாம் என அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றோம். ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் அவ்வாறு அதனை மீறினால், மாற்று அரசாங்கம் என்ற ரீதியில் எதிர்க்கட்சி மக்கள் சார்பாக வீதியில் இறங்கிப் போராடும் என்று எதிர்ககட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

# உழ்ஹிய்யா விவகாரம்: சமூக நல்லிணக்கத்தையும் அரசியலமைப்பையும் முன்னிறுத்தி சுமுகத் தீர்வு கோரும் ஸ்ரீலங்கா ஜனநாயகக் கட்சி

**(நூருல் ஹுதா உமர்)**

உழ்ஹிய்யா தொடர்பான தற் போதைய நிலைமையில் சமூக நல்லிணக்கத்தையும் அரசியலமைப்புச் சட்ட உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் உடனடி சுமூகத் தீர்வு அவசியம் என ஸ்ரீலங்கா ஜனநாயகக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

கட்சி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், இலங்கையில் சமூகங்களுக்கிடையிலான ஒற்றுமையும் மத நல்லிணக்கமும் நாட்டின் நிலைத்தன்மைக்கான அடிப்படைத் தூண்களாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

2026 ஆம் ஆண்டுக்கான வெசாக் வாரம் மே 27 முதல் ஜூன் 2 வரை அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப் பட்டுள்ள நிலையில், முஸ்லிம் சமூகத்தின் புனித ஈதுல் அல்ஹா (ஹஜ்ஜுப் பெருநாள்) மே 28 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இஸ்லாமிய மதக் கடமைகளில் முக்கியமானதாகக் கருதப்படும் உழ்ஹிய்யா, துல்ஹஜ் பிறை 10 முதல் 13 வரை, குறிப்பாக மே 28 முதல் மே 31 அஸர் நேரம் வரை நிறைவேற்றப்பட வேண்டிய கட்டாய கடமையாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், இக்காலப்பகுதியில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி, பொது நிர்வாக அமைச்சின் விசேட வர்த்தமானி அறிவிப்பின் அடிப்படையில் இறைச்சிக்காகப் பிராணிகளை அறுப்பதும் விற்பனை செய்வதும் தடைசெய்யப்பட்டுள்ளமை, உழ்ஹிய்யா கடமையை நிறைவேற்று வதில் சட்ட மற்றும் நிர்வாக ரீதியான குழப்பநிலையை உருவாக்கியுள்ளது என கட்சி தெரிவித்துள்ளது.

இந்த நிலைமையால் சமூக மட்டத்தில் தேவையற்ற சர்ச்சைகள் மற்றும் தவறான புரிதல்கள் உருவாகும் அபாயம் காணப்படுவது டன், மத உணர்வுகளும் சமூக ஒற்றுமையும் பாதிக்கப்படக்கூடிய சூழல் உருவாகும் வாய்ப்பும் இருப்பதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் அரசியலமைப்பின் 10 மற்றும் 14(1)(ந) பிரிவுகள் மத சுதந்திரத்தையும் மதப் பின்பற்றலுக் கான உரிமையையும் உறுதி செய்கின்றன என்பதை நினைவூட்டியுள்ள கட்சி, ஒரு மதக் கடமையின் நடைமுறை நிறை வேற்றம் நிர்வாகத் தடைகளால் பாதிக்கப்படுவது தொடர்பில் உரிய மறுஆய்வு அவசியம் என வலியுறுத்தியுள்ளது.

மேலும், இஸ்லாமிய மதக் கோட்பாடுகளின்படி உழ்ஹிய்யா என்பது குறிப்பிட்ட நிபந்தனை களுக்குட்பட்டவர்களுக்கு கட்டாய கடமையாகும் என்பதால், அதனை நிறைவேற்றுவதற்கான காலப் பகுதியில் உருவாகும் தடைகள் குறித்து மத அறிஞர்கள், அரச அதிகாரிகள் மற்றும் சமூக பிரதிநிதி கள் இணைந்து பரிசீலனை செய்ய வேண்டும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික පක්ෂය
ஸ்ரீ லங்கா ஜனநாயக கட்சி
Sri Lanka Democratic Party [SLDP]

வெசாக் போயா தினமும் ஹஜ்ஜுப் பெருநாளும் ஒரே காலப்பகுதியில் இடம்பெறும் விசேட சூழ்நிலையை கருத்தில் கொண்டு, எந்த சமூகத்தை யும் பாதிக்காத வகையில் சமநிலையும் நல்லிணக்கமும் பேணப்படும் தீர்வொன்றை உடனடியாக பெற்றுக்கொடுக்கு மாறு ஜனாதிபதியிடமும் சம்பந்தப் பட்ட அதிகாரிகளிடமும் ஸ்ரீலங்கா ஜனநாயகக் கட்சி மரியாதையுடன் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அனைத்து சமூகங்களின் மத உரிமைகளையும் பாதுகாத்து நாட்டின் ஒற்றுமையை வலுப்படுத்தும் வகையில் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும் என்பதே கட்சியின் உறுதியான நிலைப்பாடாகும் என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மேதினத்தில் கறுப்பாடை அணிந்து பதாகைகள் ஏந்தியவாறு விழிப்புணர்வுப் போராட்டம் நடாத்திய முத்து நகர் விவசாயிகள்





திருகோணமலை - பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவுக் குட்பட்ட முத்துநகர் விவசாயிகள் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு (01) கறுப்பாடை அணிந்து, பதாகைகளை ஏந்தியவாறு விழிப்புணர்வு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டம் திரு கோணமலை கண்டி பிரதான வீதியின் முத்து நகர் சந்தியில் இடம் பெற்றது.

கடந்த பல வருடங்களாக தமது வயல்காணிக்களுக்கான தீர்வினைப் பெற்றுத்தருமாறு கோரியே இவ் விழிப்புணர்வுப் போராட்டம் இடம்பெற்றது.

விவசாய காணிகளை சூரையாடி தனியார் கம்பனிகளுக்கு சூரிய மின்சார உற்பத்திக்காக



வழங்கப்பட்டதை கண்டித்து தொழிலாளர் தினத்தை கரிநாளாக மாற்றி போராடினார்கள்.

எமது நிலம் எமக்கு வேண்டும், விவசாயிகளுக்கு நீதி வேண்டும், நலிவடைந்த உழவருக்கு ஐ.எம். எப். நீதி பெற்றுத்தா!, முத்து நகர் விவசாய காணிகளை மீள தா! போன்ற வாசகங்களை ஏந்தியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு கமத் தொழிலாளர்களின் விவசாய நிலங்களைப் பெற்றுத்தருமாறு கோரி சுமார் 50 பேருக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## அதிபர் சேவை பரீட்சையை உடன் நடத்தக் கோரி இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் பரீட்சை ஆணையாளருக்கு கடிதம்

2026.04.26 ஆம் திகதி திட்டமிட்டபடி நடத்தவிருந்த இ.அ.சே.தரம் 111 இற்கான பரீட்சை ஏற்றுக் கொள்ள முடியாத காரணமாக பிற்போடப் பட்டமையானது அநீதியான செயற்பாடு எனவும், பரீட்சையை விரைவாக நடாத்த பரீட்சை திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் பரீட்சை ஆணையருக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

பல வருடங்களாக அதிபர் சேவை பரீட்சை நடாத்தப்படாது காலம் தாழ்த்தப்பட்டமையானது பாடசாலை நிர்வாக விடயங்களில் பல்வேறுபட்ட சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது. வர்த்தமானி அறிவித்தல் விடுத்து, பரீட்சை நாளை என்ற நிலையிலும், அனுமதி அட்டை வழங்கிய பின்னரும் தவிர்க்க முடியாத காரணம் எனக்கூறி பரீட்சை ஒத்திவைக்கப்பட்ட நாடாக எமது நாடு வரலாற்றில் இடம்பிடித்துள்ளது.

தனது சொந்த மொழியில் வர்த்தமானியை வாசித்து விளங்கிக் கொண்டு விண்ணப்பிக்க முடியாதவர் களுக்காக பரீட்சை பிற்போடப்பட்ட மையானது ஏற்றுக் கொள்ள முடியாது.

இதில் அரசியல் பின்புலம் இருக்கின்றதா என்ற சந்தேகமும் இல்லாமலில்லை. 2018 இல் தமக்குக் கிடைக்காத சந்தர்ப்பத்தை மீளவும் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பாக பயன்படுத்த காத்திருந்தவர்களுக்கு இது மிகுந்த ஏமாற்றத்தையும், மனவுளைச்சளைச்சலையும் அளித்துள்ளது.



எடுக்கப்பட்ட முடிவுகள் ஒரு சிலருக்காக மாற்றப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. அனர்த்தங்கள் மற்றும் வினாத்தாள் கசிவு காரணமாக பரீட்சை பிற்படுத்தப்பட்டிருந்தால் அதனை ஏற்க முடியும். பரீட்சைக்காக தமது நேரம், காலம், பணம், விடுமுறைகளை செலவு செய்து ஆயத்தமானவர்கள் இன்று ஏமாற்றமடைந்துள்ளனர்.

பரீட்சை திணைக்களத்தின் மீது இந்நாட்டு மக்கள் வைத்துள்ள நம்பகத் தன்மையை காப்பாற்ற வேண்டிய கடப்பாடு திணைக்களத்திற்கு உள்ளது. எனவே பரீட்சை திணைக்களம் வெகு விரைவாக இ.அ.சே.பரீட்சையை நடாத்த ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்க செயலாளர் எம்.கே.எம்.நியார் பரீட்சை ஆணையாளருக்கு எழுத்து மூல வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## அறிவிப்பாளர் போட்டி இறுதி சுற்று கண்டியில் நடைபெற்றது



**(பாரா தாஹீர்)**

தேடல் மீடியா கொலேஜ் நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அகில இலங்கை ரீதியிலான அறிவிப்பாளர் இறுதி சுற்று கண்டி ஜின்னா மண்டபத்தில் அதன் பணிப்பாளர் எஸ்.ஐ.எம். ஹம்தி தலைமையில் நடைபெற்றது.

இணைய வழி நிகழ்நிலை ஊடாக நடைபெற்ற முதல் சுற்றில் சுமார் நானூறு போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். தொடராக பல மாதங்கள் நடைபெற்ற தெரிவினை தொடர்ந்து இறுதி சுற்று போட்டியில் சுமார் முப்பது பேர் அளவில் போட்டியிட்டனர்.

வயது அடிப்படையில் மூன்று பிரிவுகளாக நடைபெற்ற இறுதி சுற்றில் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இவ் நிகழ்வில் சர்வதேச மனித உரிமைகள் உலகளாவிய பணி நிர்வாக உறுப்பினரும் சக்தி தொலைக்காட்சி ஊடகவியலாள ருமான ஏ. டப்லியூ .எம். பஸ்லான் சிறப்பு விருந்தினர்களும் கலந்து சிறப்பித்தார்.

## சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்

**( ஐ. ஏ. காதிர் கான் )**

திஹாரிய பண்டாரநாயக்க பிரதேசத்தைச் சேர்ந்த எம்.ஆர். குல்ஸார் அஹ்மத், கடந்த 30 ஆம் திகதி, அத்தனகல்ல நீதவான் நீதிமன்றத்தின் நீதிவான் பீ.டப்ளியூ.என்.டி. பியரத்ன முன்னிலையில், கம்பஹா மாவட்டத்திற்கான சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.


கொழும்பு - நாவல திறந்த பல்கலைக் கழகத்தில் பட்டப் பின் படிப்பை மேற்கொண்டு வரும் இவர், சில்மியாபுர ஜும்ஆப் பள்ளிவாசல் பரிபாலன சபை முன்னாள் தலைவர் அல்ஹாஜ் முஹம்மத் ரஸ்ஸாக் (ஜேபி) - ஹாஜியானி நூருல் ஹனீனா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வராவார்.

பஃ சில்மியாபுர அல் - முர்ஷித் மகா வித்தியாலயம், வறக்காப் பொல தாருள் ஹஸனாத் கலாபீடம்




ஆகியவற்றின் பழைய மாணவரான இவர், மனிதவள முகாமைத்துவம், கணனி, கணக்கியல், உளவியல் போன்ற துறைகளில் டிப்ளோமோ கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கஹட்டோவிட்ட ஒக்ஸ்போட் சர்வதேச கல்லூரி யின் உரிமை யாளரும் பணிப்பாளருமான இவர், பல்வேறு சமூக நலப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றார்.



# உழ்ஹிய்யாவும் வெசாக் வாரமும்

# இன முரண்பாடுகளைத் தோற்றுவிக்குமா?



எம்.எஸ். அமீர் ஹுசைன்

முஸ்லிம்களது ஹஜ்ஜுப் பெருநாள் தினம் மே மாதம் 28 ஆம் திகதி எதிர்கொள்கிறது. அதனையடுத்து உழ்ஹிய்யா கொடுப்பதற்கான காலம் துல் ஹஜ் பிறை 10 முதல் 13 வரையான காலப்பகுதியை உள்ளடக்கிய 18 ஆம் திகதியில் இருந்து 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியாகும். இதற்கிடையில் சிங்கள பௌத்தர்களது சிறப்பு தினங்களுள் ஒன்றான பொசொன் மற்றும் போயா தினம் 30ம் திகதி அமைந்திருக்கின்றது.
இது இவ்வாறிருக்க மே மாதம் 01 ஆம் திகதி மற்றும் 02 ஆம் திகதிகளில் அனுஷ்டிக்கப்பட இருந்த வெசாக் போயா தினத்தை மே மாதம் கடைசி வாரமான 27 ஆம் திகதி முதல் 02 ஆம் திகதி வரை கொண்டாட அரசாங்கம் ஒப்புதல் வழங்கி இருக்கின்றது. அதனால் இம்முறை மே 01 மற்றும் 02ம் திகதிகளில் நாட்டில் வெசாக் கொண்டாட்டங்கள் நடைபெறவில்லை.
பொதுவாக வெசாக் கொண்டாடுவதிலோ அல்லது பொசொன் பௌணமி தினம் கொண்டாடுவதிலோ இதுவரையில் எந்தவிதமான சர்ச்சைகளும் எழுந்ததில்லை. இருந்தாலும் வெசாக் கொண்டாட்ட தினங்களில் மூன்று நாட்களுக்கு இறைச்சி கடைகளை மூடவும் மதுபானச்சாலைகளை மூடவும் அரசாங்கம் உத்தரவிடுவது மரபாக இருந்து வருகின்றது. இம்முறை வெசாக் தினம் அனுஷ்டிக்கப்பட இருந்த மே 01 ஆம் திகதி மே தின கொண்டாட்ட தினமாகவும் இருந்ததால் வெசாக் தினத்தை அந்த நாட்களில் கொண்டாட சிங்கள பௌத்த மக்கள் ஆர்வம் காட்டவில்லை. அத்துடன் அரசாங்கம் தேசிய வெசாக் வாரத்தை 27 ஆம் திகதி முதல் ஜுன் 02 ஆம் திகதி வரை நடத்த தீர்மானித்து அறிவிப்பு செய்ததும் இதற்கு காரணமாகும்.
இந்த வெசாக் வாரத்தை பொசான் போயா தினம் வருகின்ற நாளை திட்டமிட்டு வெசாக் கொண்டாட்டமாக பிரகடனப்படுத்த வேண்டும் என்ற வேண்டுகோளை மகாசங்கத்தினர் 2025 டிசம்பர் மாத காலப்பகுதியில் விடுத்திருந்ததால் அதனை பரிசீலனை செய்தே அரசாங்கம் அங்கீகாரம் வழங்கி இருக்கின்றது.
முஸ்லிம்களது பிறைக் குழு போன்று சிங்களவர்களது போயா குழுவும் சுப நேர குழுவும் முன்வைத்த சில கருத்துக்களின் அடிப்படையில் புத்தர் பிறந்த, ஞானம் பெற்ற மற்றும் துறவரம் பூண்ட நாட்களாக பௌத்தர்கள் வெசாக் மற்றும் பொசான் போயா தினங்களை கொண்டாடி வருகின்றனர். இந்த காலப்பகுதிகளில் எந்தவிதமான பாவ காரியங்களிலும் அவர்கள் ஈடுபடுவதில்லை. அத்துடன் பௌத்தம் எல்லா உயிரினங்களிடத்திலும் அன்பு செலுத்துவதால் இந்த காலப்பகுதியில் மாடறுப்புக்கும் தடை விதிக்கப்படுகின்றது.
ஆனால் இந்த விடயங்களால் முஸ்லிம்களுக்கு எவ்வாறு பிரச்சினை ஏற்படுகின்றது என்ற கேள்வி எழுகின்றது. இந்த வினாவுக்கு பதில் தான் இந்த வெசாக் வாரமும் ஹஜ்ஜுப் பெருநாளை தொடர்ந்து உழ்ஹிய்யா நிறைவேற்ற வேண்டிய நாட்களும் ஒரே காலப்பகுதியில் சந்திப்பதால் அரசாங்கம் அதற்கு இடமளிக்குமா? அவ்வாறு அரசாங்கம் இடமளித்தாலும் சிங்களவர்களின் பார்வையில் முஸ்லிம்களது இந்த மத கடமையை நிறைவேற்றுவது என்ன அடிப்படையில் நோக்கப்படும்? அரசாங்கம் அனுமதி வழங்கினால் சிங்கள மக்கள் அதனை அங்கீகரிப்பார்களா? போன்ற கேள்விகள் எழுந்துள்ளன.
ஆனாலும் இவ்விடயம் குறித்து அரசாங்கம் இதுவரையில் எந்தவிதமான உறுதியான அறிவித்தல்களையும் வெளியிடவில்லை. ஒன்றில் முஸ்லிம்கள் மே 28 ஆம் திகதி ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடிய அதே தினமும் மறுநாள் 29 ஆம் திகதியும் உழ்ஹிய்யா கடமைகளை நிறைவேற்றி முரண்பாடுகளுக்கு வழி ஏற்படாமல் சுமுகமான முறையில் பிரச்சினையை தீர்த்துக் கொள்ளுமா? இவ்விடயத்தில் முஸ்லிம் தலைமைகளின் நிலைப்பாடு மற்றும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் நிலைப்பாடு எவ்வாறு அமைகின்றது என்பதே முக்கியமான பேசு பொருளாக மாறி இருக்கின்றது.
ஆனாலும் ஏற்கனவே 2025 ஆம் ஆண்டு டிசம்பர் காலப்பகுதியில் பௌத்த சமூகம், மகா சங்கம் இது தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்த போது முஸ்லிம் தலைமைகள் குறிப்பாக ஆளும் கட்சியுடன் இணைந்து செயற்படும் முஸ்லிம் பிரதிநிதிகள் என்ன செய்தார்கள்? அப்போதைய நிலையில் அரசாங்கம் அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை வெளியிட முன்னர் இவர்கள் அரச தரப்போடு கலந்துரையாடல்களை நடத்த வில்லையா என்ற கேள்விகளும் எழுந்துள்ளன.
எதுவானாலும் இப்போது சர்ச்சைக்குரிய கட்டத்தை அடைந்துவிட்டோம். ஏற்கனவே ஞானசார தேரர், கசப்ப தேரர் ஆகியோரினால் இந்த விடயத்தில் பிரச்சினை இருக்கின்றது. முஸ்லிம்கள் அவர்களது மத கடமைகளை செய்யவும் வேண்டும். அதே நேரம் வெசாக் வாரத்தில் உயிர் பலியிடலை அனுமதிக்கவும் முடியாது என்ற அடிப்படையில் கருத்துக்களை பரப்பி முரண்பாட்டிற்கு வழிவகுக்கும் வகையில் தூண்டுதல்களை முன்வைத்து வருகின்றனர். கசப்ப தேரர் தெரிவிக்கையில் இந்த விடயமானது சிங்கள மக்களையும் பௌத்தர்களையும் மோத விடுவதற்காக முன்னெடுக்கப்படும் அரசாங்கத்தின் சதியாகும் என்று குற்றம் சுமத்தி இருக்கின்றார்.
இவ்விடயம் தொடர்பாக கடந்த 2026.04.28 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவிக்கையில் அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவிக்கையில் இவ்விடயம் தொடர்பாக மகாநாயக்கா தேரர்களுடன் கலந்துரையாடி அரசாங்கம் ஒரு முடிவை அறிவிக்கும் என்று தெரிவித்தார். ஒருவிதமாக அவரது கூற்றின்படி மகாநாயக்கா தேரர்கள் இந்த நாட்களில் ஓஹிய்யாவுக்கு தடை ஏற்படுத்தும் வகையில் இந்த நாட்களில் ஆடு, மாடு, உட்பட கால்நடைகளை அறுக்க அனுமதி வழங்க முடியாது என்று அறிவித்தால் முஸ்லிம் தரப்பு என்ன செய்யும் என்பதே பிரதான விடயமாகும். அரசாங்கத்தினதும் மகா சங்கத்தினதும் அறிவித்தல்களை மீறி முஸ்லிம்கள் செயற்பட்டால் அதுவே இன முரண்பாட்டிற்கும் மத ரீதியான பிரச்சினைகளுக்கும் அடிப்படையாக அமையலாம்.
சிங்கள தரப்பு வெசாக் போயா தின கொண்டாட்டங்களை பின்போட்டது போன்று முஸ்லிம்களும் உழ்ஹிய்யா கொடுப்பதையும் மே 02 ஆம் திகதியின் பின்னர் செய்து கொள்ளுங்கள் என்று வேண்டுகோள் விடுத்தால் அதற்கான மத சகிப்புத் தன்மைக்கும் விட்டுக்கொடுப்புக்கும் முஸ்லிம் மக்கள் தயாராக இருந்தால் எந்தவிதமான பிரச்சினைகளும் ஏற்படாது. ஏற்கனவே போயா தினங்கள் இல்லாவிட்டாலும் உழ்ஹியா கொடுப்பதற்கு கால் நடைகளைஅறுக்கும் போது அந்தந்த பிரதேச சபைகளது அனுமதியை பெற வேண்டிய நிபந்தனை நடைமுறையில் இருந்து வருகின்றது. முஸ்லிம்கள் அந்த சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டவர் களாகவே ஏற்கனவே இந்த கடமைகளை நிறைவேற்றி வருகின்றனர். இந்த விடயத்தில் சுமுகமான தீர்வை பெற்றுத் தர வேண்டும் என்று சட்டத்தரணி பைசர் முஸ்தபா ஜனாதிபதிக்கு கடிதம் எழுதி இருப்பதும் குறிப்பிடத் தக்கது.
அத்துடன் பிரச்சினை வராமல் உழ்ஹிய்யாவை நிறைவேற்ற முடியும் என்று பிரதி அமைச்சர் முனீர் முழப்பரும் தெரிவித்துள்ளார்.
ஆனாலும் முஸ்லிம்கள் தமது மத கடமைகளில் ஒன்றை நிறைவேற்ற மகாசங்க த்தினரின் அனுமதியை பெற வேண்டும் என்ற விடயமானது நாட்டில் இதுவரையில் கடைபிடிக்கப் பட்டு வருகின்ற மத சுதந்திரத்தை ஏதோ ஒருவிதத்தில் மீறும் செயலாகும். அரசியல் அமைப்பின் பிரிவு 10 இல் வலியுறுத்தப்பட்டிருக்கின்ற மத சுதந்திரத்தை பின்பற்ற முஸ்லிம்கள் யாரிடமும் கேட்டு அனுமதி பெற வேண்டிய அவசியம் இல்லை.
அரசாங்கம் அதன் ஆட்சி எல்லைக் குட்பட்ட அதிகாரத்தை கொண்டு தீர்மானம் எடுக்க வேண்டிய விடயத்தை இன்னுமொரு தரப்பிற்கு ஒப்படைத்து புதிய நடைமுறையை அறிமுகப் படுத்தினால் இதன் பிறகு சகல விடயங்களுக்கும் அரசாங்கம் அனுமதி வழங்கினால் தான் முஸ்லிம்கள் அவர்களது விடயங்களை செய்துகொள்ள முடியும் என்ற ஒரு நடைமுறை ஏற்பட்டால் அரசியல் அமைப்பு சட்டம் எதற்கு, இந்த நடைமுறை அரசியல் அமைப்பால் வழங்கப்பட்ட அடிப்படை உரிமையை மீறும் செயலாக இல்லையா என்ற அடிப்படையில் சிந்திக்க வேண்டி இருக்கின்றது.
எவ்வாறோ தேசிய மக்கள் சக்தியை ஆதரிக்கும் அதற்கான குரல் கொடுக்கும் முஸ்லிம் தலைமைகள் இந்த விடயத்தில் எமது உரிமைகள் பறிபோனாலும் பிரச்சினை இல்லை. நாம் விட்டுக்கொடுப்புக்கு தயாராக வேண்டும் என்று கூறி வருகின்றனர். அவர்களது பக்கத்தில் இருந்து அது சரியாக பட்டாலும் விட்டுக் கொடுப்பானது தொடர்ச்சியான உரிமைகளை இழப்பதற்கு அடிப்படையாக மாறினால் அதற்கு யார் பொறுப்பாவார்கள்? ஏற்கனவே அரசாங்கம் கூட போயா தினத்தை பின்போடுவதற்கான தீர்மானம் எடுத்த போது அதே நாட்காட்டியில் அல்லது கலண்டரில் முஸ்லிம்களது ஹஜ்ஜுப் பெருநாள் தினம் மற்றும் அரபு ரீதியாக நிறைவேற்றப்படுகின்ற உழ்ஹிய்யா கடமை பற்றி அறிந்து அது பற்றி முஸ்லிம் தரப்பினருடனும் ஒரு கலந்துரையாடலை செய்திருக்க வேண்டும். அல்லது இப்படியான ஒரு தீர்மானம் எடுக்கப்பட இருக்கின்றது என்பதை அறிந்து அரசுக்கு எமது மத கடமைகள் பற்றிய அறிவூட்டலை முஸ்லிம் தரப்பில் இருந்து செய்யப்பட்டிருக்க வேண்டும். அதுவும் நடந்தில்லை.
எது எவ்வாறானாலும் இந்த விடயத்தில் சிந்தித்து செயலாற்ற வேண்டிய நிர்ப்பந்த நிலையில் நாம் அனைவரும் இருக்கின்றோம்.

# மாலைதீவு ஜனாதிபதிக்கு ஜனாதிபதி அலுவலக வளாகத்தில் அமோக வரவேற்பு













ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் அழைப்பின் பேரில், அரச பயணம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள மாலைதீவு ஜனாதிபதி கலாநிதி முகமது முய்சுவை (Dr. Mohamed Muizzu) வரவேற்கும் உத்தியோக பூர்வ நிகழ்வு, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையில் இன்று (04) முற்பகல் ஜனாதிபதி அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

மாலைதீவு மற்றும் இலங்கை இடையிலான பொருளாதார, கலாசார மற்றும் சமூக உறவுகளை மேலும் மேம்படுத்துவதையும், இரு நாடுகளுக்கும் இடையிலான பன்முகக் கூட்டாண்மையை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு, மாலைதீவு ஜனாதிபதி கலாநிதி முகமது முய்சு (Dr Mohamed Muizzu) இந்த அரச பயணத்தை மேற்கொள்கிறார்.

மாலைதீவு ஜனாதிபதி கலாநிதி முகமது முய்சு (Dr. Mohamed Muizzu) மற்றும் அவரது பாரியார் சாஜிதா முகமது, பொலிஸ் குதிரைப் படை அணிவகுப்புடன் ஜனாதிபதி அலுவலக வளாகத்திற்கு அழைத்து வரப்பட்டதையடுத்து, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவினால் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

இரு நாடுகளின் தேசிய கீதங்கள் இசைக்கப்பட்டதைத் தொடர்ந்து, மாலைதீவு ஜனாதிபதி கலாநிதி முகமது முய்சுவை (Dr. Mohamed Muizzu) வரவேற்கும் உத்தியோக பூர்வ நிகழ்வு ஆரம்பமானது.

அங்கு முழுமையான அரச கௌரவத்துடன் கூடிய மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு, மாலைதீவு ஜனாதிபதி கலாநிதி முகமது முய்சுவை (Dr Mohamed Muizzu) வரவேற்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து, இலங்கை இராணுவத்தின் அணிவகுப்பு மரியாதையையும் மாலைதீவு ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார்.

மாலைதீவு ஜனாதிபதி கலாநிதி முகமது முய்சு (Dr. Mohamed Muizzu) மற்றும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க ஆகியோர் கௌரவ மரியாதைகளை ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து, மாலைதீவு - இலங்கை அரச பிரதிநிதிகள் அறிமுகப்படுத்தப்பட்டனர்.

இதன்போது, மாலைதீவு ஜனாதிபதி அரச தலைவர்களுக்கான விசேட நினைவுப் புத்தகத்தில் விசேட குறிப்பொன்றை இட்டு கையொப்ப மிட்டார்.

மாலைதீவு அரசாங்கத்தின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் இர்திஷாம் ஆதம் (Iruthisham Adam), பொருளாதார அபிவிருத்தி, போக்குவரத்து மற்றும் வர்த்தக அமைச்சர் முகமது சயீத் (Mohamed Saeed), மீன்பிடி, விவசாயம் மற்றும் கடல்சார் வளங்கள் அமைச்சர் அஹ்மட் ஷியாம் (Ahmed Shiyam), உள்நாட்டு பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் அலி இஹுசான் (Ali Ihusaan), ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி அப்துல்லா பயாஸ் (Abdulla Fayaz), வெளிநாட்டு உறவுகளுக்கான ஜனாதிபதியின் முதன்மைச் செயலாளர் முகமது நசீர் (ஆohamed Naseer), அரசாங்கத்தின் தலைமைப் பேச்சாளர் முகமது ஹுசைன் ஷரீப் (Mohamed Hussain Shareef), இலங்கைக்கான மாலைதீவு உயர்ஸ்தானிகர் மசூத் இமாத் (Masood Imad), வெளி விவகார இராஜாங்க அமைச்சர் மற்றும் புரோடகோல் தலைவர் முகமது ஷ/ஹுதி (Mohamed Shahudy), ஜனாதிபதி பாரியாரின் சமூகச் செயலாளர் கதீஜா நஷ்வா (Khadeeja Nashwa), ஜனாதிபதியின் பிரதி உப செயலாளர் முகமது ஹசன் (Mohamed Hassaan) மற்றும் ஜனாதிபதி பாரியாரின் தனிப்பட்ட பணிப்பாளர் லுபாபா அலி (Lubaba Ali) ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இலங்கை அரசாங்கத்தின் சார்பில் வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், தொழில் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் கிரிஷாந்த அபேசேன, பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வுபெற்ற) சம்பத் துய்யகொந்தா, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் (ஐரோப்பா, வட அமெரிக்கா, கிழக்கு ஆசியா மற்றும் ஓசியானியா, தென்கிழக்கு ஆசியா மற்றும் மத்திய ஆசியா, தெற்காசியா, மத்திய கிழக்கு மற்றும் சட்டப் பிரிவு) எம். ஆர். கே. லெனகல மற்றும் மாலைதீவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் முகமது ரிஸ்வி ஹசன் (Mohamed Rizvi Hassen) ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## பேருவளையின் சமூக விருத்திக்காக களமிறங்கியுள்ள 'BUSF' அமைப்பின் கன்னி அமர்வும் நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வும் வெற்றிகரமாக நிறைவு!

(பீ.எம் முக்தார்)

இளைஞர் வலுவூட்டல் மற்றும் சமூக மேம்பாட்டை நோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்ட "Beruwala Unity & Social Forum" (BUSF) அமைப்பின் கன்னி அமர்வும், நிர்வாக உறுப்பினர்களுக்கான உத்தியோகபூர்வ நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வும் மருதானையில் அமைந்துள்ள அமைப்பின் தலைவர் இல்லத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

அமைப்பின் தலைவர் , ஊடகவியலாளர் ஸாபித் துல்பிகார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அமைப்பின் எதிர்காலச் செயல்பாடுகள் குறித்த ஆரம்ப கட்ட அறிமுகம் மற்றும் யாப்பு வெளியீடு என்பன இடம்பெற்றன.

நிகழ்வின் சிறப்பம்சமாக, கௌரவ ஆலோசகர் அல்ஹாஜ் எம்.எஸ் ஸவாஹிர் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன்,





அவரின் கரங்களினால் நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கான உத்தியோகபூர்வ நியமனக் கடிதங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, அமைப்பின் கொள்கைகளை உறுதிப்படுத்தும் வகையில் உறுப்பினர்களினால் உறுதிமொழி ஏற்கும் நிகழ்வும் இடம்பெற்றது.



பேருவளை சமூகத்தில் புதியதொரு மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த அமைப்பின் கன்னி அமர்வு, மிகுந்த உற்சாகத்துடன் நிறைவு பெற்றமை குறிப்பிடத்தக்கது

## கற்பிட்டி பிரதேச முன்னாள் காதி நீதிபதி கபீர் காலமானார்

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)



கற்பிட்டி பிரதேச முன்னாள் காதி நீதிபதி அல்ஹாஜ் எஸ்.ஏ.பீ.ஏ கபீர் திங்கட்கிழமை (04) அதிகாலை அன்னாரின் இல்லத்தில் வைத்து காலமானார். முன்னாள் காதி நீதிபதியாகவும் பள்ளிவாசல்துறை தபால் நிலையத்தின் தபால் விநியோஸ்தராகவும் 32 வருடங்கள் கடமையாற்றியதுடன் புத்தளம் மாவட்ட சமாதான நீதிவானாகவும் ஓய்வூதிய சங்கத்தின் தலைவராகவும் இருந்ததையும் குறிப்பிடத்தக்கது அன்னாரின் ஜனாஸா நல்லடக்கம் இன்ஷா அல்லாஹ் இன்று பிற்பகல் 04 மணிக்கு பள்ளிவாசல் துறை ஜும்ஆ பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.




# இலங்கையின் முதலாவது ஹஜ் குழு- 2026

## கட்டுநாயக்க வழியனுப்பலும் ஜித்தாவில் வரவேற்பும்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இலங்கையிலிருந்து சென்ற 325 ஹாஜிகளைக் கொண்ட முதல் குழு கடந்த (02) சனிக்கிழமை அதிகாலை சவூதி அரேபியாவின் ஜித்தாவிலுள்ள மன்னர் அப்துல் அஸீஸ் சர்வதேச விமான நிலையத்தைச் சென்றடைந்தனர். இதன் மூலம் இலங்கையின் இந்த ஆண்டுக்கான ஹஜ் யாத்திரை நடவடிக்கைகள் தொடங்கின.
இவர்களுக்கு விமான நிலையத்தில் அமோக வரவேற்பளிக்கப்பட்டது. சவுதி அரேபியாவிற்கான இலங்கைத் தூதுவர் அமீர் அஜ்வாத், திருமதி அஸ்மியா அமீர் அஜ்வாத் மற்றும் பதில் துணைத் தூதுவர் மஃபுசா லாபிர் ஆகியோருடன் இணைந்து இலங்கை ஹாஜிகளை அன்புடன் வரவேற்றார்.
ஜித்தாவில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தின் அதிகாரிகள், 2026 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் ஹஜ் சேவை வழங்குநராக நியமிக்கப்பட்டுள்ள 'ரெஹ்லத் வா மனாபே' (Rehlat Wa Manafe) அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் 'நுசுக்' (ரேளரம) ஹஜ் செயற்பாடுகளின் பிரதிநிதிகள் ஆகியோரும் இலங்கை ஹாஜிகளை வரவேற்பதற்கும் அவர்களது வருகைக்கான ஏற்பாடுகளை எளிதாக்குவதற்கும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.
இங்கு உரையாற்றிய தூதர் அமீர் அஜ்வாத், ஹாஜிகளுக்கு தனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்த தோடு, ஹஜ் யாத்திரையின் ஆழ்ந்த ஆன்மீக முக்கியத்துவத்தையும் எடுத்துக் கூறினார்.
இலங்கை உட்பட உலகம் முழுவதிலுமிருந்து சவூதிக்கு வருகை தரும் இலட்சக்கணக்கான ஹாஜிகளின் நல்வாழ்வையும் வசதியையும் உறுதி செய்வதற்காக வழங்கப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் சிறப்பான வசதிகளுக்காக, இரு புனித ஸ்தலங்களின் பாதுகாவலரான மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அல் சவூத் மற்றும் முடிக்குரிய இளவரசரும் பிரதமருமான இளவரசர் முகமது பின் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அல் சவூத் ஆகியோருக்கு தூதுவர் தனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்தார்.
இலங்கை ஹாஜிகள் தங்களது ஹஜ் கடமையைச் சிறப்பாகவும் நல்ல முறையிலும் நிறைவேற்றுவதற்கு உதவ ரியாத்தில் உள்ள இலங்கைத் தூதரகமும், ஜித்தாவிலுள்ள கொன்சலேட் ஜெனரல் அலுவலகமும் தயாராக உள்ளதாக தூதர் மேலும் தெரிவித்தார்.
இந்த வருட ஹஜ்ஜூக்காக 3,500 இலங்கை ஹாஜிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்தக் கடமை வெற்றிகரமாக முன்னேடுக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, இலங்கை ஹஜ் தூதுக் குழு, சவூதி அரேபியாவின் ஹஜ் மற்றும் உம்ரா அமைச்சு, சவூதி சேவை வழங்குநர் மற்றும் உள்ளூர் பயண ஏற்பாட்டாளர்கள் ஆகியோரிடையே நெருங்கிய ஒத்துழைப்புடன் இந்த ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்படுகிறன்றது.
இதேவேளை, இவ்வாண்டு (2026) புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக இலங்கை யிலிருந்து சவூதி அரேபியாவை நோக்கி இந்த முதலாவது ஹஜ் குழு 01 ஆம் திகதி இரவு 09.05 மணிக்கு விசேட சவூதி ஏயார் லைன்ஸ் விமானம் மூலம் ஜித்தா பயணமனது.
இந்த முதலாவது ஹஜ் குழுவில் 07 ஹஜ் முகவர்கள் மூலமாக 325 பேர் பயணமாகினர்.
இவர்களை வழியனுப்பும் நிகழ்வு 01 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 05 மணிக்கு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இடம்பெற்றது.
இந்நிகழ்வில் சவூதி அரேபிய தூதுவர் காலித் பின் ஹமூத் அல் - கஹ்தானி, பிரதி சபாநாயகர் றிஸ்வி சாலி, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ், அரச ஹஜ் குழுவின் தலைவர் றியாஸ் மிஹ்லார், விஞ்ஞான தொழிநுட்ப அமைச்சின் செயலாளர் வை.எல்.எம். நவவி, ஹஜ் முகவர்கள் சங்கத்தின் தலைவர் எச்.எம். அம்ஜடீன், மற்றும் அதன் உறுப்பினர் றுஸ்தி காலித், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அதிகாரிகளான கே. சப்றி மற்றும் அஷ்ஷெய்க் முப்தி முர்ஷி, ஹஜ் முகவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்ததும் குறிப்பிடத்தக்கது.





கட்டுநாயக்க வழியனுப்பல் படங்கள்







ஜித்தாவில் வரவேற்பு படங்கள்





# காவத்தமுனையில் தாய்சேய் சிகிச்சை நிலையம், நிரந்தரக் கட்டடத்தில் திறந்து வைப்பு







**(எஸ்.எம்.எம். முர்ஷித்)**

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவு காவத்தமுனை கிராமத்தில் மிக நீண்டநாள் தேவையாகக் காணப்பட்ட தாய்சேய் சிகிச்சை நிலையம் (28) கடந்த செவ்வாய்க் கிழமை நிரந்தரக்கட்டிடத்தில் திறந்து வைக்கப்பட்டது.

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.தாரிக் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எஸ்.முரளீஸ்வரன் கலந்து கொண்டதுடன், கௌரவ அதிதிகளாக ஓட்டமாவடி பிரதேச சபைத்தவிசாளர் எம்.எம். எம்.ஹலால்தீன், உதவிப்பிரதேச செயலாளர் எச்.எம்.எம்.பாறூக், ஐ.எஸ்.ஆர்.சி நிறுவனத்தின் திட்ட ஆலோசகர் ஏ.எல்.ஜூனைட் நளீமி, ஓட்டமாவடி கால்நடை வைத்திய அதிகாரி ஏ.எச்.எம்.ஹபீல், ஓட்டமாவடி பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என கலந்து கொண்டனர்.

குவைத் நாட்டின் பைதுல் ஸக்காத் நிறுவனத்தின் நிதிப்பங்களிப்புடன் ஐ.எஸ்.ஆர்.சி ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் குவைத் நாட்டின் பைதுல் ஸக்காத் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்பில் ஐ.எஸ்.ஆர்.சி இலங்கை நிறுவனத்தின் பங்களிப்பில் அமையப்பெற்ற மூன்றாவது தாய்சேய் சிகிச்சை நிலையம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## புத்தளம் ஜம்மியத்துல் உலமாவின் மத நல்லிணக்கத்திற்கான முன்னெடுப்பாக பௌத்த விகாரைக்கு விஜயம்





**(எம்.எச்.எம்.சியாஜ்)**

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக் கிளையினர், சமூகத்தில் மதங்களுக்கிடையேயான ஒற்றுமை, பரஸ்பர மரியாதை மற்றும் நல்லுறவை வலுப்படுத்தும் உயரிய நோக்கில் ஒரு சிறப்பான நல்லிணக்க விஜயமாக புத்தளம் கொழும்பு பிரதான வீதியில் அமைந்துள்ள பௌத்த விகாரைக்கு சென்றிருந்தனர்.

விஜயத்தில் கலந்து கொண்ட குழுவினர், அங்குள்ள தலைமை பௌத்த பிக்குவை சந்தித்து, நட்புறவு மற்றும் பரஸ்பர புரிதலை வளர்க்கும் நோக்கில் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதன் போது, சமூகத்தில் அமைதி, சகிப்புத் தன்மை மற்றும் நல்லுறவை நிலைநிறுத்துவதில் மதத் தலைவர்களின் பங்கு மிக முக்கியமானது என்பதை இரு தரப்பினரும் வலியுறுத்தினர்.

மேலும், மனிதாபிமானம், ஒற்றுமை மற்றும் பரஸ்பர மரியாதை மேலிட வேண்டிய அவசியத்தையும் எடுத்துக் காட்டினர்.

இச்சந்திப்பு, மதங்களுக்கிடையேயான நம்பிக்கை, நட்பு மற்றும் நல்லிணக்கத்தை வலுப்படுத்திய சிறந்த முன்னுதாரணமாக அமைந்ததுடன், எதிர்காலத்தில் இத்தகைய முயற்சிகளை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியமையும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வூதிய திட்டம் தொடர்பிலான தெளிவூட்டல் நிகழ்வு







**(எம்.ஏ.முகமட்)**

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வூதிய திட்டம் தொடர்பிலான தெளிவூட்டல் நிகழ்வு கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச். முகம்மது கனி தலைமையில் கிண்ணியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில்(29) இடம்பெற்றது.

அரச ஓய்வூதியம் அல்லாத தொழிலாளர்களுக்கு எவ்வாறு அரச ஓய்வூதியத்தை பெற்றுக் கொள்வது தொடர்பாகவும் , சிறுவர்களுக்கான அரசாவ ஓய்வூதிய திட்டம் அவர்களுக்கு கிடைக்கும் பயன்கள் தொடர்பிலான தெளிவூட்டலும் இதன் போது வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் கிழக்கு மாகாண சிரேஸ்ட இணைப்பாளர் எஸ். சுதாகரன், திருகோணமலை மாவட்ட செயலக சமூக பாதுகாப்பு சபையின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பீ. சஜிகா, இளைஞர் சமூக பாதுகாப்பு சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் நே.தர்ஷன் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள், தையல் பயிற்சி மாணவிகள், ஆட்டோ சாரதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்

**( ஐ. ஏ. காதிர் கான் )**



திஹாரிய, தர்கா வீதியைச் சேர்ந்த எம். ஜே. எம். குபைப், கம்பஹா மாவட்டத்திற்கான சமாதான நீதவானாக, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி, அத்தனகல்ல நீதவான் நீதிமன்றத்தின் நீதிவான் பீ. டபிள்யூ.என்.டி. பியரத்ன முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் பழைய மாணவரான இவர், சந்தைப்படுத்தல் துறையில் நிபுணத்துவம் பெற்றவராவார்.

தற்போது, டயலொக் நிறுவனத்தில் மூத்த விற்பனை மற்றும் சந்தைப் படுத்தல் மேலாளராகப் பணியாற்றி வருகிறார்.

சமூக சேவைப் பணிகளில் நீண்டகாலமாக ஈடுபட்டு வரும் இவர், திஹாரிய மஸ்ஜிதுர் ரௌளா பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை செயலாளராகவும், 'ஐடியல் பெற்றோர்' அமைப்பின் தலைவராகவும் கடமையாற்றி வருகிறார்.

இவர், மர்ஹூம் எம்.எஸ்.எம். ஜமீன் (உடுகொடை / திஹாரிய) - சுல்தான் பீவி (கொழும்பு) தம்பதிகளின் செல்வப் புதல்வராவார்.

## The Knowledge Key Academy-இன் வருடாந்த பட்டமளிப்பு மற்றும் பரிசளிப்பு விழா



**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

வத்தளைப் பகுதியில் அமைந்துள்ள The Knowledge Key Academy நிறுவனத்தின் வருடாந்த பொதுப் பட்டமளிப்பு விழா, கொழும்பு மன்சில் வரவேற்பு மண்டபத்தில் அதன் பணிப்பாளர் பாத்திமா அஜாரா தலைமையில் மிக விமர்சையாக நடைபெற்றது.

இந்த விழாவில், அகடமியில் மருதாணி கலை, கேக் பேக்கிங் கலை மற்றும் ரெசின் ஆர்ட் போன்ற கற்கை நெறிகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

அத்துடன், மாணவர்களின் திறமைகளை ஊக்குவிக்கும் வகையில் நடாத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஏ.எம்.ரோயல் அகடமியின் பணிப்பாளர் அஸ்மா முஸ்தாக் கலந்து சிறப்பித்ததுடன், விசேட அதிதியாக ஹம்து மற்றும் கௌரவ அதிதியாக முகமது லாஹிர் ஆகியோரும் பங்கேற்றனர்.

இக்கற்கை நெறிகளை வெற்றிகரமாக நிறைவு செய்த மாணவர்களுக்கும், அவர்களின் கல்விப் பயணத்திற்குப் பக்கபலமாக இருந்த பெற்றோர்களுக்கும் அகடமி நிர்வாகம் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

அருவிக்கரை



நாச்சியாரீவு பர்வீன்

## ஏன் இந்த யுத்தம்

சுத்தும் இந்த பூமியில்
சுற்றிவர யுத்தம்
நித்தம் இதனால் வாழ்வினில்
எழுகிறது அச்சம்
சொற்பகால வாழ்கையிதில்
அற்பமாக சண்டை ஏனோ!

மரணம் என்ற உண்மை
நம் முன்னால் நின்று சிரிக்கிறது
தருணம் வந்தால் எல்லோரும்
தவறாமல் போய்விடணும்

ஏன் இந்த யுத்தம்?
யார் இங்கு குத்தம்?
ஏன் இந்த யுத்தம்?
யார் இங்கு உத்தம்?

கண்ணீர் இப்போ காய்ந்து போனது...
கானல் நீராய்
வாழ்வு ஆனது... புழுதியில் வாழ்வு
புதைந்து போனது...
புன்னகை மறைந்து
புயலாய் ஆனது...

தாயை இழந்து தவிக்கின்ற பிஞ்சுகள் செய்த பாவம்
என்ன... பாசத்தின் விழுதுகள் போனது...
கண்கள் கோடி குருடானது ..
நீதி எழுத்தில் சிறையானது....

குற்றம் இழந்து சுற்றம் இழந்து
நாதியற்ற வாழ்வுக்கு
நியாயம் என்ன சொல்வீரோ!

ஏ.ஆர்.கன்சுல் - திக்குவல்லை

# "பிரெஞ்சு புரட்சி" என் உள்ளத்தை சுண்டி இழுத்தெடுத்த ஒரு புரட்சி!




545 பக்கங்கள்... ஜஸ்ட் 545 பக்கங்களை கொண்ட ஒரு நூலே இது! இதை விட 20 பக்கங்கள் குறைவாக இருந்த இருந்த (525) ஆசான் பா ராகவ-னின் வட கொரியா பிரைவேட் லிமிடெட் நூலை வாசித்து முடிக்க என-க்கு ஒரு பகலும் ஒன்றரை இரவுகளுமே எடுத்தன. ஆனால் இந்த நூலை வாசித்து முடிக்க, முடிக்க என்ன பாதி நூலை கடக்கவே இரண்டாண்டுகள் ஆகிவிட்டன என்றால் என்னாலே நம்ப முடியவில்லை!

2024 பெப்ரவரி. பஸ்டில் சிறையை உடைக்கிற மாதிரி ஒரு வேகத்தோட இந்த நூலை வாங்கினேன். அன்று தொடங்கிய யுத்தம் இன்னைக்கு வரைக்கும் முடியல. கொஞ்சம் கொஞ்சமா, பக்கம் பக்கமா, சிரமப்பட்டு இழுத்து பிடித்து இன்றுவரை வாசித்து வருகிறேன். பிரமாதமான காரணம் எல்லாம் இல்லை. என்ன விஷயம் என்றால் இந்த தமிழ் எனக்கு செட் ஆகவில்லை. என் நூலகத்தை ஆக்கிரமித்திருக்கும் நூற்களில் பெரும்பாலானவை இந்திய - தமிழ்நாட்டு எழுத்தாளர் களின் நூற்கள். எனவே அந்த தமிழை வாசித்து பழகியதால் நானும் அவர்களை போன்று எழுத வேண்டும் என்று ஆசைப்படுபவன். எனவே இலங்கை தமிழில், நான் வாழும் நாட்டின் தமிழில் எழுதப்படும் நூற்கள் எனக்கு சுவராசியத்தை அளிக்க வில்லை என்பதை நினைக்கும் போது வருத்தமளிக்கிறது.

இதை எழுத்தாளரின் குறை என்ற சொல்ல மாட்டேன். ஏனெனில் ஒவ்வொரு எழுத்தாளருக்கும் ஒவ்வொரு தனித்துவமான நடை இருக்கும். எனக்கு தமிழ் நாட்டு எழுத்தாளர்கள் Pa Raghavan , Mugil Siva , Marudhan Gangadharan , என். சொக்கன் , செ.திவான் போன்றோரே ரோல் மாடல்கள்! இலங்கையில எண்ணற்ற சிறந்த எழுத்தாளர்கள் இருக்கி றார்கள் என்பதை நான் மறுக்கல. ஆனால் இலங்கை தமிழ் நடை என் மூளைக்குள்ள ஏற மறுக்கிறது. இது என் பிரச்சனை. என் வாசிப்பு பழக்கத்தோட பிரச்சனை.

பிரெஞ்சு புரட்சி என் உள்ளத்தை சுண்டி இழுத்தெடுத்த ஒரு புரட்சி! Liberté, égalité, fraternité"- சுதந்திரம், சமத்-துவம், சகோதரத் துவம். என்கிற இந்த 3 வார்த்தைகள் இருக்கே நான் சொல்லித்தான் நீங்கள் இவை பற்றி அறிய வேண்டுமா? ரூஸோ பற்றி எல்லாம் படிக்கும் போதும் கேட்கும் போதும் சில்லறையை செதற விடுபவன் நான். Man is born free, and every where he is in chains" - மனிதன் சுதந்திரமாகப் பிறக்கிறான், ஆனால் எங்கும் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருக் கிறான் என்ற ரூஸோவின் பொன் மொழியை மறக்க முடியுமா? ரூஸோவின் சமூக ஒப்பந்தம் நூல் தமிழில் உள்ளது என்பதை தேடி எடுத்தவன் நான் (1950 களில் வந்த மொழிப்பெயர்ப்பு அது). அப்படிப்பட்ட எனக்கு, தமிழில் விரிவாக பிரெஞ்சுப் புரட்சி பற்றி ஒரு நூல் கிடைத்தால் விடுவேனா?

உடனே வாங்கிட்டேன். அட்டைப்படத்தில் உள்ள யூஜின் டெலாக்ராவோட "Liberty Leading the People" - பாஸ்டில் சிறை முன்னாடி கொடி பிடித்து நிற்கிற பெண். பார்த்த உடனே வாங்கணும்னு தோணுச்சு. இன்னும் அரை நூல் பாக்கி உள்ளது. லூயி ஒஹஜ தலை வெட்டப்பட்டதா, Robespierre-ன் பயங்கர ஆட்சி ஆரம்பிச்சதா. என்பதெல்லாம் பார்க்க உள்ளது. ஆனா என்னால 525 பக்க வட கொரியா மாதிரி இதை விழுங்க முடியல. ஒவ்வொரு பாராவும் நின்னு நிதானமா வாசிக்கணும். மொழி நடை, வாக்கிய அமைப்பு - எல்லாமே என் மூளைக்கு புதுசாக உள்ளது வேறு.

இது தோல்வியா? என்று கேட்டால் இல்லவே இல்ல. இது ஒரு பயிற்சி. தமிழ்நாட்டு தமிழ் மட்டும் தமிழ் இல்லை. ஈழத்து தமிழ், மலையக தமிழ், சோனகர் பேசுகிற தமிழ் - எல்லாமே தமிழ் தான் என்று எனக்கு நானே சமாதானம் சொல்லிக்கொண்டு இதை ஒரு பயிற்சியாக எடுப்பதை தவிர வேறு வழியில்லை.

அதனால இந்த 545 பக்கத்தையும் முடிப்பேன். இன்னும் ஒரு வருஷம் ஆனாலும் சரி. ஏன்னா பிரெஞ்சுப் புரட்சி சொல்லி தந்த பாடம் - சுதந்திரம் சுலபமா கிடைக்காது. போராடணும் என்பதே!

நான் இப்போ இந்த நூலோட போராடிட்டு இருக்கேன். வாசித்து முடிச்சதும் சொல்றேன் - இந்த போராட்டம் ஜெயிச்சுதா? இந்த நூல் என் எதிர்பார்ப்பை பூர்த்தி செஞ்சுதா?

அதுவரைக்கும், பாஸ்டில் சிறை உடைக்கப்பட்ட மாதிரி, என் வாசிப்பு தடையையும் உடைப்பேன்.

**அப்துல்லாஹ் இப்னு நஸீர்.**

## அன்பான வாசகர்களே!

**அறிவுக்கரை பகுதிக்கு உங்களது இலக்கியக் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் என உங்களது ஆக்கங்களை எங்களுக்கு அனுப்பி வையுங்கள் தரம் கண்டு பிரசுரிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். உங்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்பி வைக்க கீழே உள்ள whatsapp இலக்கத்தை பயன்படுத்தவும்.**

0767877876

# வெசாக் வாரத்தில் உழ்ஹிய்யா: வதந்திகளை நம்ப வேண்டாம்

## பிரதியமைச்சர் முனீர் முளப்பர்

**கடந்த 2ஆம் திகதி சக்தி தொலைக்காட்சி அலைவரிசையில் ஒளிபரப்பான நியூஸ்லைன் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர் முனீர் முளப்பரிடம் கேட்கப்பட்ட சில கேள்விகளுக்கு அளிக்கப்பட்ட பதில்கள்:**

கேள்வி: வெசாக் வாரம் அறிவிக்கப்பட்டு ள்ளமையினால் ஹஜ் பெருநாள் காலத்தில் உழ்ஹிய்யா கொடுப்பதில் ஏதாவது பிரச்சினை ஏற்படுமா?

பிரதியமைச்சர் முனீர் முளப்பர் அளித்த பதில்.

"மே மாதம் முதலாம் திகதி தான் வெசாக் போயா தினம் காணப்பட்டது. எமது நாட்டின் உயர்பீட பௌத்த தேரர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப மே மாதம் 30 ஆம் திகதி இருக்கின்ற போயா தினத்திற்கு உடன்பாட்டுடன் பிற்போடப் பட்டது. இந்நிலையில் பொது நிர்வாக அமைச்சினால் மே மாதம் 27 ஆம் தி-கதியில் இருந்து ஜுன் இரண்டாம் திகதி வரை வெசாக் வாரம் என சுற்று நிரூபம் வெளியிடப்பட்டுள்ளது. அந்த சுற்று நிரூபம் மாத்திரமே வெளியிடப் பட்டுள்ளது. அதனைத் தவிர வேறு எந்த கருத்துக்களையும் அரசாங்கம் முன் வைக்கவில்லை. இந்த நிலையில் சிலர் இதனை அரசியல் ஆக்கி தங்களுடைய சில நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக முயல்கிறார்கள். அவர்கள் பதவிக்காக விளையாட்டையும் அரசியலாக்குகின்றார்கள். மார்க்கத்தையும் அரசியலாக்குகின்றார்கள். கடந்த முறை எமது ஹஜ்ஜுப் பெருநாள் தினமும் அதனை அண்டிய தினங்களும் பொசான் வாரத்தில் தான் காணப்பட்டது. அப்போதும் எமது அரசாங்கமே காணப்பட்டது. நாம் கவனமாக எத்தகைய பிரச்சினைகளும் இல்லாமல் அதனை சிறப்பாக மேற் கொண்டோம். இந்த முறையும் நாங்கள் மிகவும் கவனமாக உழ்ஹிய்யா விடயத்தையும் மேற்கொள்ள இருக்கின்றோம்.

கேள்வி: அதில் ஏதாவது பிரச்சினை ஏற்படாது என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா?




பதில்: "எந்தப் பிரச்சினையையும் ஏற்படுத்த வேண்டும் என்று தேவை அரசாங்கத்துக்கு இல்லை. அது முஸ்லிம் சமூகத்தின் கடமை. உரிமை என்பதையும் தாண்டி ஒரு இபாதத்தாக பார்க்கின்றோம். எமது கடமைகளை மேற்கொள்வதை போன்று, ஏனைய சமூகங்களின் மன உணர்வுகள் பற்றி தெளிவாக இருந்து செயற்பட வேண்டி ஒரு தருணமும் இருக்கிறது. அடுத்த வாரமாகும் போது குறித்த விடயம் சம்பந்தப்பட்ட சுற்று நிரூபம் வெளியாக இருக்கின்றது. எல்லோரும் அவசரப்படுகின்றார்கள். கேள்வி கேட்கின்றார்கள். எமது நாட்டில் போயா தினத்தில் மாத்திரமே மதுபான சாலைகளும் இறைச்சிக் கடைகளும் மூடப்படுகின்ற வழமை இருக்கின்றது. எனவே இது சம்பந்தமான சுற்று நிரூபம் இதுவரை வெளியிடப்படுவதில்லை. அத்தகைய சுற்று நிரூபம் வெளிவந்துள்ளதாக எதிர்த்தரப்பினர் வதந்திகளை பரப்பி மக்களை குழப்புகின்ற னர். மீண்டும் அவர்களுடைய காலத்தில் இருந்த இனவாதத்தை கொண்டு வரலாமா என்ற முயற்சியிலே ஈடுபட்டு வருகின்றார்கள்.

அத்தகைய நிலைமை ஏற்படாமல் இருப்பதற்காக எமது அரசாங்கம் அனைத்து வேலைத் திட்டங்களையும் மேற்கொள்ளும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது"

(ரியாஸ் ஹாரிஸ்)

# அறுகம்பையில் கைதான பாணந்துறை இளைஞர்களுக்காக கிழக்கில் உள்ள சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து நீதியை நிலைநாட்டுங்கள்

## - ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் தவிசாளர் மௌலவி மிப்லால் பகிரங்க அழைப்பு !

**(நூருல் ஹுதா உமர்)**

பொத்துவில் - அறுகம்பை பிரதேசத்தில் வைத்து பொலிஸாரினால் கடந்த வியாழக்கிழமை (30) கைது செய்யப்பட்ட பாணந்துறையைச் சேர்ந்த ஏழு முஸ்லிம் இளைஞர்களுக்காக கிழக்கில் உள்ள சட்டத்தரணிகள் இனம், பிரதேச வேறுபாடுகள் பாராமல் மே 06ம் திகதி நீதிமன்றுக்கு சமூகமளித்து அந்த இளைஞர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும் என ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் தவிசாளர் மௌலவி முஹம்மத் மிப்லால் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

ஊடகவியலாளர்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

நாளுக்கு நாள் முஸ்லிங்களின் இருப்பு கேள்விக்குறியாகும் நிலை இலங்கையில் உருவாகி வருகிறது. முஸ்லிம் பெயர் தாங்கியவர்களாக, அடையாளம் தாங்கியவர்களாக இருந்தால் அரச பாதுகாப்பு இயந்திரம் உற்றுநோக்கும் நிலை இப்போது உருவாகியுள்ளது. பாணந்துறையைச் சேர்ந்த ஏழு முஸ்லிம் இளைஞர்கள் பொத்துவில் - அறுகம்பை பிரதேசத்திற்கு கடந்த வாரம் சுற்றுலா சென்று அங்கு உணவருந்தவும், தங்குவதற்கும் நல்ல ஹோட்டல் தொடர்பில் விசாரித்த போது பிரதேசவாசிகள் இஸ்ரேல் நாட்டவர்கள் தங்கும் பிரதேசம் நல்ல இடம் என்றும் அங்கே தான் நல்ல உயர்ரக ஹோட்டல்கள் இருப்பதாகவும் பரிந்துரைத்துள்ளனர்.

அதனடிப்படையில் அங்கு செல்ல முச்சக்கர வண்டி சாரதியிடம் கோரிய போதே பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு பொலிஸாரினால் கடந்த வியாழக்கிழமை அவர்கள் விசாரணைக்காக கைது செய்யப்பட்டுள்ளனர். சுற்றுலா செல்லும் எல்லோரும் ஒழுங்கான உணவகங்களை சுற்றுலா தளங்களில் தேடுவது வழமையே. அதற்காக கைது செய்வதென்பது எந்த வகையில் நியாயம்?

இனிவரும் காலங்களில் உதிர்ந்து விழும் இஸ்ரேல் நாட்டவர்களின் முடியை முஸ்லிங்கள் மிதித்தால் கூட பாதுகாப்பு தரப்பு கைது செய்வார்களோ என்ற சந்தேகம் எழுகிறது. அந்த இளைஞர்களுக்கு உதவிய அவர்களின் குடும்பத்தினரை கூட தீவிரமாக பாதுகாப்பு துறையினர் கண்காணிக்கும் நிலை இருக்கிறது. இஸ்ரேல் நாட்டவர்களினால் நாட்டுக்கு கிடைக்கும் வருமானத்தை விட அவர்களின் பாதுகாப்புக்கே அரசாங்கம் அதிக நிதியை செலவிடவேண்டியிருக்கிறது.




பொத்துவில் - அறுகம்பை பிரதேசத்தில் வைத்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட பாணந்துறையைச் சேர்ந்த ஏழு முஸ்லிம் இளைஞர்களும் நீதித்துறை சரியாக செயற்பட்டமையால் 50 ஆயிரம் ரூபாய் சரீர பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஆனாலும் வழக்கு விசாரணை மே 6ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதன்போது கிழக்கில் உள்ள 100 கணக்கான சட்டத்தரணிகள் வேறுபாடுகள் பாராமல் நீதிமன்றுக்கு சமூகமளித்து சட்டத்தை காத்து மனித உரிமையை நிலைநாட்டி

அந்த இளைஞர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும் என்றும் பாராளுமன்ற அமர்வுகளில் இந்த அநீதி தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் குரலெழுப்ப வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படியான நிலை தொடர்ந்தால் வெள்ளையர்கள் முதல் இப்போதைய ஆட்சி வரை நாட்டுக்கு விசுவாசமாக வாழும் முஸ்லிங்கள் இலங்கையில் எதிர்காலத்தில் நிம்மதியாக வாழ்வதில் பாரிய சவால் உருவாகும் என்றும் தெரிவித்தார்.

# புளிச்சாக்குளம் உமர் பாரூக் வித்தியாலயத்தின் புதிய கணனி கூடம் திறந்து வைப்பு





**(எம்.எச்.எம்.சியாஜ்)**

கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் தித்வா புயல், வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு கணனி மற்றும் கணனி கூடம் வழங்கும் வேலைத்திட்டம் டெக்நோ சிட்டி மற்றும் லெப்டப்.எல்கே நிறுவனத்தின் அனுசரனையுடன் நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



அதன் அடிப்படையில் (30) புத்தளம் புளிச்சாக்குளம் உமர் பாஷரூக் மகா வித்தியாலயத்தின் கணனி கூடம் திறப்பு விழா பாடசாலையின் அதிபர் எம்.யூ.எம். சாஜஹான் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் டெக்நோசிட்டி மற்றும் லெப்டப்.எல்கே நிறுவனத்தின் உரிமையாளர், இணைப்பாளர் மற்றும் பணிப்பாளர் பிரதமரின் மேலதிகச் செயலாளர், வடமேல் மாகாண கல்விப் பணிப்பாளர், வடமேல் மாகாண கணனி துறைக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர் மற்றும் பாடசாலையின் முகாமைத்துவ குழுவினர், கணனி பாட ஆசிரியர்கள் , கணனி பாட மாணவர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

சுமார் 7 மில்லியன் ரூபா பெறுமதியான கணனிகள், தளபாடங்கள் உள்ளடங்கிய கணனி கூடம் கிடைக்கப்பெற்றமை ஊடாக பாடசாலை கணனி பாட மாணவர்களின் தகவல் தொழிநுட்ப அறிவை மேலும் மேம்படுத்தி அவர்களின் டிஜிட்டல் உலக பயணத் திற்கு பெரும் துணையாக அமையும் என்பதுடன் இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய சகலருக்கும் பாடசாலை நிர்வாகம் சார்பில் தமது நன்றிகளையும் அதிபர் மேலும் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கஹட்டோவிட்டவின் முதல் பெண் சமாதான நீதவானாக பாத்திமா ரஈஸா சத்தியப் பிரமாணம்

**( ஐ. ஏ. காதிர் கான் )**

கஹட்டோவிட்டயைச் சேர்ந்த அப்துர் ரஸ்ஸாக் பாத்திமா ரஈஸா, கம்பஹா மாவட்டத்திற்கான சமாதான நீதவானாக நீதி மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சினால் நியமனம் பெற்றுள்ளார்.

இந்நியமனம், 2026 ஏப்ரல் 30 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அத்தனகல்ல நீதவான் நீதிமன்ற த்தின் நீதிவான் பீ.டப்ளியூ.என்.டி. பியரத்ன முன்னிலையில் இவர் (30) சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

பேராதனைப் பல்கலைக் கழகப் பட்டதாரியான பாத்திமா ரஈஸா, கல்வியியலில் பட்டப்பின் படிப்பை நிறைவு செய்துள்ளதோடு, கல்வி முகாமைத்துவத்தில் பட்டப் பின் படிப்பை தற்போது மேற்கொண்டு வருகின்றார்.

இலங்கை அதிபர் சேவை (SLPS) சித்தியுடன் இவர், தற்போது குமாரி முல்லை முஸ்லிம் மகா



வித்தியாலயத்தில் பிரதி அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார்.

இவர், பல்வேறு சமூக நலப் பணிகளில் ஈடுபட்டு வருவதோடு, ஊடகத்துறையிலும் மிகத் திறமை யாகச் செயற்பட்டு வருகிறார்.

கஹட்டோவிட்டவின் முதல் பெண் சமாதான நீதவானாகிய பாத்திமா ரஈஸா, மர்ஹூம் மௌலவி ஆசிரியர் அப்துர் ரஸ்ஸாக்- சித்தி பௌஸியா தம்பதிகளின் செல்வப் புதல்வியாவார்.

# அல்குர்ஆனை முழுமையாக ஓதி முடித்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் நினைவுச் சின்னம் வழங்கி வைப்பு







**(ஏ.எஸ்.எம்.ஜாவித்)**

கொழும்பு 12 வாழைத் தோட்டம் அல்- மஸ்ஜில் முனீர் மஅல் மத்ரஸாவில் புனித அல்குர்ஆனை முழுமையாக ஓதி முடித்து அதன் ஆரம்ப சட்ட திட்டங்களையும் கற்ற 16 மாணவர்களுக்கு அன்மையில் சான்றிதழ்கள், நினைவுச் சின்னம் மற்றும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப் பட்டனர்.

பள்ளிவாசல் தலைவர் அல்ஹாஜ் ஜஹாங்கிர் அலி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வை மத்ரஸ ாவின் அதிபர் மௌலவி ரயிசூதீன் வழிநடாத்தி சென்றார்.

நிகழ்வில் மாணவர்களின் உஸ்தாத்மார்கள் , பள்ளிவாசலின் நிருவாக சபை அங்கத்தவர்கள், பள்ளிவாசலின் போசகர்கள், நலன் விரும்பிகள், மாணவர்களின் பெற்றோர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

# பிசியோதெரபி மருத்துவநிலையம் திறந்து வைக்கப்பட்டது





**(பீ.எம்.முக்தார்)**

மூட்டு வலி, நரம்பு சம்மந்தமான பிரச்சினைகள் பெண்களுக்கான விஷேட பிசியோதெரபி சிகிச்சை முறைகள், சீனன் கோட்டை ஸை க்குலர் வீதியில் அமைந்துள்ள சீனன் கோட்டை பள்ளிச் சங்கத்துக்கு சொந்தமான கட்டிடத்தில் வெகு விமர்சையாக திறந்து வைக்கப்பட்டது.




மேற்படி மருத்துவ நிலைய பொறுப்பாளர் டாக்டர் ஹஸ்னா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சீனங் கோட்டை பள்ளிச் சங்க இணைச் செயலாளர் எம்.எம். எம் சிஹாப் திறந்து வைத்தார். பேருவலை நகரபிதா மபாஸின் அஸாஹிர் உட்பட பள்ளிச் சங்க உறுப்பினர்கள், உலமாக்கள், வைத்தியர்கள் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

## மனநலமும் ஆலோசனையும் 98

# O/L பரீட்சை முடிவும் மகிழ்ச்சியின் பெயரில் ஒழுக்க இழப்பும்

ஒவ்வொரு ஆண்டும் O/L பரீட்சையின் கடைசி நாள் முடிந்தவுடன், சில இடங்களில் மாணவர்கள் முட்டையால் அடித்துக்கொள்ளல், மை வீசுதல், ஆடைகளை அசிங்கப்படுத்துதல் போன்ற செயல்களில் ஈடுபட்டு, சாலைகளில் ஊர்வலமாகச் செல்லும் காட்சிகள் காணப்படுகின்றன. இது "மகிழ்ச்சி வெளிப்பாடு" அல்லது "பழக்கம்" எனக் கூறப்பட்டாலும், உண்மையில் இது சிந்திக்க வேண்டிய ஒரு சமூக நிகழ்வாகும். இதன் பின்னால் சில முக்கியமான காரணங்கள் இருக்கின்றன.

பரீட்சை காலம் மாணவர்களுக்கு மிகுந்த மனஅழுத்தத்தை ஏற்படுத்தும். அந்த அழுத்தம் கடைசி நாளில் திடீரென வெளிப்பட வேண்டுமெனும் உணர்வு உருவாகிறது. அதோடு, குழுவாக இருக்கும் போது "அனைவரும் செய்கிறார்கள்" என்ற மனநிலை உருவாகி, தனிப்பட்ட பொறுப்புணர்வு குறைவதும் இயல்பு. மேலும், சமூக ஊடகங்களில் கவனம் பெற வேண்டும் என்ற விருப்பமும் சிலருக்கு இப்படியான செயல்களுக்கு ஊக்கமளிக்கிறது. முன்னிருந்த மாணவர்கள் செய்ததால் அதைத் தொடர வேண்டும் என்ற எண்ணமும், மகிழ்ச்சியை எவ்வாறு பண்புடன் வெளிப்படுத்துவது என்பதில் சரியான வழிகாட்டல் இல்லாமையும், இந்த நடத்தைக்கு காரணமாகின்றன.

ஆனால், இத்தகைய செயல்களின் விளைவுகள் சிறியவை அல்ல:

* தனிநபர் கண்ணியம் பாதிக்கப்படலம்
* பாடசாலையின் நல்ல பெயர் குலைதல்
* பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுதல்
* சொத்து சேதம் ஏற்படும் அபாயம் உருவாதல்
* விபத்துகள் நடைபெறும் சாத்தியம் அதிகரித்தல்
* பெற்றோருக்கு அவமானம் ஏற்படல்
* சமூகத்தில் தவறான புரிதல்கள் உருவாகுதல் என பல பாதிப்புகள் ஏற்படலாம்.

மகிழ்ச்சியை வெளிப்படுத்துவது தவறு அல்ல. ஆனால் அது மரியாதையுடனும் பொறுப்புடனும் அமைய வேண்டும். உண்மையான மகிழ்ச்சி, மற்றவர்களுக்கு தொந்தரவு அளிக்காததிலும், தன்னைக் காக்கும் பண்பிலும் வெளிப்பட வேண்டும். இவ்வாறான பண்பாடற்ற செயல்களை தடுக்கும் பொருட்டு முன்கூட்டியே நடவடிக்கைகள் எடுப்பது அவசியமாகும்.

* பரீட்சைக்கு முன்பே ஒழுக்கம் மற்றும் பொறுப்புணர்வு குறித்த விழிப்புணர்வு வழங்குதல்
* பாடசாலைகளில் முறையான பிரியாவிடை மற்றும் பாராட்டு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்தல்
* பெற்றோர், ஆசிரியர், பழைய மாணவர்கள் ஆகியோரின் ஒருங்கிணைந்த கண்காணிப்பை அமைத்தல்.
* பரீட்சை முடியும் நாளில் மாணவர்களை பெற்றோரிடம் ஒப்படைக்கும் நடை முறையை உருவாக்குதல்.

மாணவர்களுக்குள் "நாம் சமூகத்தின் ஒரு பொறுப்புள்ள அங்கம்" என்ற உணர்வை வளர்ப்பது மிகவும் அவசியமானது.



பரீட்சை முடிவது வாழ்க்கையின் ஒரு கட்டத்தை நிறைவு செய்வதே அன்றி, ஒழுக்கத்தை இழக்கும் நாளல்ல. மகிழ்ச்சியை வெளிப்படுத்துவது அழகானது – ஆனால் அது கண்ணியத்தையும் மரியாதையையும் காக்கும் விதத்தில் இருக்க வேண்டும். இது போன்ற சந்தர்ப்பங்களில் மாணவர்களை கண்டிப்பதைவிட... அவர்களுக்கு பண்புடன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் கலாசாரத்தை உருவாக்கிக் கொடுப்பது ஆசிரியர்கள், பெற்றோர், பாடசாலை நிர்வாகம் மற்றும் முழு சமூகத்தின் பொறுப்பாகும்.

இதற்கான சிறந்த நுட்பங்களை இப்போதிலிருந்தே மேட்கொண்டால், வரும் காலங்களில் நல்ல பண்பாடு மலரும் சந்தர்ப்பங்களை உருவாக்கலாம்.



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

---

## மங்கையொளி

பயாஸா பாஸில்

# கைத்தையல் (Hand Embroidery)



கைத்தையல் என்பது துணியில் ஊசி மற்றும் நூல் பயன்டுத்தி அழகிய வடிவங்களை உருவாக்கும் ஒரு பாரம்பரிய கலை. இது மனிதன் உருவாக்கிய பழமையான அலங்காரக் கலைகளில் ஒன்றாகும். கைத்தையல் உடை அலங்கா ரத்திற்கும், கலாச்சார அடையாளத்திற்கும், கைவினைப் பண்பாட்டிற்கும் முக்கிய பங்கு வகிக்கிறது.

கைத்தையலின் வரலாறு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் தொடங்குகிறது. Ancient Egypt, China மற்றும் India போன்ற நாகரிகங்களில் கைத்தையல் பயன்படுத்தப்பட்டதை ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. அந்த காலங்களில் அரச குடும்பத்தினர் மற்றும் செல்வந்தர்கள் தங்களின் சமூக அந்தஸ்தை வெளிப்படுத்த அழகிய கைத்தையல் உடைகளை அணிந்தனர். நடுக்கால Europe-இல் தேவாலய அலங்காரங்கள் மற்றும் அரச உடைகளில் கைத்தையல் முக்கிய இடம் பெற்றது. முதலில் Surface Embroidery மிகவும் பொதுவான கலையாகும். .தில் துணியின் மேற் பரப்பில் stitches மூலம் வடிவங்கள் உருவாக்கப்படுகின் றன. Running stitch, chain stitch, satin stitch போன்றவை இதில் அடங்கும். இது beginnersக்கு மிகவும் எளிதான தாகும். அடுத்து Counted thread Embroidery வருகிறது. .தில் துணியின் நூல்களை எண்ணி Cross Stitch அல்லது Black Work போன்ற வடிவங்கள் உருவாக்கப் படுகின்றன. இது மிகவும் துல்லியமான மற்றும் ஒழுங்கான வடிவமைப்புகளுக்கு பயன்படுகிறது. Needlepoint Embroidery என்பது உயரெ்ளை மீது செய்யப்படும் ஒரு வகையாகும். இதில் wool thread பயன்படுத்தப்படுவதால் thick மற்றும் strong வடிவம் கிடைக்கும். crewel Embroidery-யும் இதற்கு ஒத்ததாக இருந்தாலும் இது குறிப்பாக wool thread மூலம் உருவாகிறது. இது பாரம்பரிய ஐரோப்பிய பாணியை பிரதிபலிக்கிறது. கைத்தையல் பல்வேறு வகைகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பகுதியும் தனித்தனி பாணிகளை உருவாக்கியுள்ளது. இந்தியாவில் zardozi, Chikankari, Kantha போன்ற பாரம்பரிய கைத்தையல் வகைகள் பிரபலமானவை. Zardozi என்பது தங்கம் மற்றும் வெள்ளி நூல்களை பயன்படுத்தி செய்யப்படும் மிக செலுமையான வேலைப் பாடாகும். மிகவும் மென்மையான மற்றும் நுட்பமான வடிவங்களை கொண்டது. kantha gioa துணிகளை மீண்டும் பயன்படுத்தில் Sashiko என்ற எளிய மற்றும் உள்ளது. சீனாவில் Silk Embroide இவ்வாறு உலகின் பல பகுதிகளி கலை வடிவமாக வளர்ந்துள்ளது. செய்யப்படும் ஒரு வகை. ஜப்பானி அழகான கைத்தையல் பாணியில் மிகவும் நுணுக்கமானதாகும். கைத்தையல் தனித்துவமான மேலும் Ribbon Embroidery என்பது Silk Ribbon பயன்படுத்தி 3D Flower Designs உருவாக்கும் ஒரு அழகான பாணியாகும். Mirror Work அல்லது Shisha Embroidery யில் சிறிய கண்ணாடிகள் பயன்படுத்தப்பட்டு பிரகாசமான வடிவங்கள் உருவாக்கப் படுகின்றன. Aari Embroidery-யில் Hook Needle பயன்படுத் படுவதால் வேகமாக மற்றும் நுணுக்கமாக வேலை செய்யமுடியும். Embroidery வகைகள் மிகவும் பரந்தவை மற்றும் ஒவ்வொரு வகையும் தனித்துவமான அழகையும் கலாசாரத்தையும் கொண்டுள்ளது.

இது ஒரு கைவினை மட்டுமல்ல: இது ஒரு கலை மற்றும் பாரம்பரியத்தின் அடையாளமாகும். இன்றைய காலத்தில் மீண்டும் பேஷன் உலகில் முக்கிய இடம் பெற்று வருகிறது. எதிர்காலத்தில் கைத்தையல் புதிய மாற்றங்களை சந்திக்கிறது. தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக கைத்தையல் முறைஇல் புதுமைகள் உருவாகின்றன. Artifical Intelligence மற்றும் 3D Printing போன்ற தொழில்நுட்பங்கள் வடிவமைப்பில் உதவுகின்றன. அதே நேரத்தில் கைத்தையல்கள் மீண்டும் முக்கியத்துவம் பெறுகிறது. காரணம் மக்கள் ,யற்கை மற்றும் கைப்பணிகளை அதிகம் விரும்புகின்றனர். Sustainable Fashion வளர்ச்சியால் Handmade Products-க்கு தேவை அதிகரித்துள்ளது. கைத்தையல் உள்ளூர் கைவனைஞர்களுக்கு வேலைவாய்ப்பையும் வழங்குகிறது. மேலும் கைத்தையல் மனஅழுத்தத்தை குறைக்கும் ஒரு சிகிச்சை செயலாகவும் பார்க்கப்படுகிறது. DIY (Do It Yourself) கலாச்சாரம் காரணமாக இளைஞர்களிடையே இது மீண்டும் பிரபலமாகிறது. ஆன்லைன் தளங்கள் மூலம் மக்கள் கைத்தையலை கற்றுக்கொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்துகின்றனர். முடிவாக கைத்தையல் என்பது ஒரு பழமையான கலை என்றாலும் அது காலத்திற்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொண்டே வருகிறது. அதன் வரலாறு அதன் முக்கியத் துவத்தை காட்டுகிறது. அதன் வகைகள் அதன் செழுமையை வெளிப்படுத்துகின்றன. அதன் எதிர்காலம் அதன் நிலைத்தன்மையை உறுதிப்படுத்துகிறது. எனவே கைத்தையல் என்பது கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் எதிர் காலத்தையும் இணைக்கும் கலை வடிவமாகும்.







பா.அஸானா. பஸ்லி
Pattern Maker & Fashion Illustrator
Founder Of Art Gallery Academy
Colombo

### அன்பான வாசகர்களே!

அழகு மற்றும் பேஷன் ஆரோக்கியம், கல்வி, மன நலம், சமையல், வீட்டு முகாமைத்துவம் , தொழில், சுய முன்னேற்றம், சமூக விழிப்புணர்வு, கலாசாரம், பொழுது போக்கு போன்ற உங்கள் ஆக்கங்களை மங்கையொளி பக்கத்துக்கு அனுப்புங்கள்.

0775486616

# பொலன்னறுவை மாவட்டத்தில் டித்வாவினால் பாதிக்கப்பட்டோருக்கு நிதி உதவிகள் வழங்கி வைப்பு





**(எம்.ரீ.ஆரிப்)**

பொலன்னறுவை மாவட்டத்தில் தமன்கடுவ மற்றும் வெலிகந்த பிரதேசத்தில் டித்வா சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி உதவி வழங்கும் நிகழ்வு பிரதி அமைச்சர் ரீ.பீ.சரத் தலைமையில் இடம்பெற்றது.

வளமான நாடு அழகான வாழ்க்கை எனும் செயற்திட்டத்திற்கு அமைய தமன்கடுவ பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட ஏழு குடும்பங்களுக்கு முழுச் சேதத்திற்கான முதற்கட்ட இழப்பீடாக ஐந்து லட்சம் வீதம் 59 குடும்பங்களுக்கும், பகுதிச் சேத இழப்பிடாக 100 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியும் மற்றும் ஒரு குடும்பத்திற்கு மரண இழப்பீடும் வழங்கப்பட்டது.

இதே வேளை வெலிகந்த பிரதேச செயலகப் பிரிவில் நான்கு குடும்பங்களுக்கு முழு இழப்பீடும் 100 குடும்பங்களுக்கு பகுதி இழப்பீடும் எட்டு நபர்களுக்கு வணிக இழப்பீடும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பொலன்னறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ரத்னசிறி, பொலன்னறுவை மேயர் லலித் திஸ்ஸ குமார தமன்கடுவ மற்றும் வெலிகந்த பிரதேச சபை தலைவர்கள் அரச அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## ஓய்வுபெறும் ஆசிரியை திருமதி எச்.ஏ. வாஹிட்கு சாய்ந்தமருது அல்ஹிலாலில் சேவை நலன் பாராட்டு விழா




**(எம்.எஸ்.எம். ஸாகிர்)**

சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் ஆசிரியையாகக் கடமையாற்றி கடந்த சனிக்கிழமை (02) தமது பணியிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் ஆசிரியை திருமதி எச்.ஏ. வாஹிட் அவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வும் சேவை நலன் பாராட்டு விழாவும் பாடசாலையின் கேட்போர் கூடமண்டபத்தில் பாடசாலையின் அதிபர் கே.எல்.ஏ. ஜௌபர் தலைமையில் இடம் பெற்றது.

இதில் பிரதம அதிதியாக கல்முனை கல்வி வலய, பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச். ஜாபிர் கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளர் அஸ்மா மலிக், முன்னாள் அதிபர்களான யூ.எல். நசார், எம்.எச். நுஸ்ரத் பேகம், பாடசாலையின் அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் பொறியியலாளர் கமால் நிஷாத் மற்றும் பிரதி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் இணைந்து இவ் விழாவை சிறப்பித்தனர்.

## கொழும்பு ஏ.இ.குணசிங்க வித்தியாலயத்தில் விஷேட தேவையுடைய மாணவர்களின் விளையாட்டு விழா






**(ஏ.எஸ்.எம்.ஜாவித்)**

தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு கொழும்பு 12, ஏ.இ. குணசிங்க வித்தியாலயத்தில் கல்வி கற்கும் விஷேட தேவையுடைய மாணவர்களுக்கு தமிழ் சிங்கள புதுவருட விளையாட்டு போட்டியை திவிசவி செவன அமைப்பும் அல்- ஹைர் முஸ்லிம் நலன்புரி சங்கமும் இணைந்து ஏ.இ. குணசிங்க வித்தியாலயத்தில் (02) நடாத்தியது .

திவிசவ செவன அமைப்பின் தலைவி நிஸாந்தி உள்ளிட்ட அங்கத்தவர்களும் அல்- ஹைர் முஸ்லிம் நலன்புரி சங்கத்தின் தலைவர் எஸ்.எச்.எம். ஜிப்ரி, உப தலைவர் எம்.எஸ்.எம். சபீக், செயலாளர் எம். ஷாஜகான் உள்ளிட்ட சங்கத்தின் உறுப்பினர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் கொழும்பு பிரதேசச் செயலகத்தின் பிரதேச செயலாளர் சந்துருவன் அனிருத், பிரதேசச் செயலகத்தின் நிருவாக அலுவலர் கே.டி.பிரியந்த உள்ளிட்ட பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

## மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மக்கள் பிரதிநிதிகளுடன் கனேடியத் தூதுவர் முக்கிய சந்திப்பு!




**(நூருல் ஹுதா உமர்)**

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் இசபெலா மார்டின், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த இலங்கை தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று சனிக்கிழமை (02)நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரனின் காரியாலயத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது, இப் பிரதேச மக்கள் எதிர்கொள்ளும் சமகாலச் சவால்கள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்துத் தூதுவருக்கு விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

இச்சந்திப்பில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞானமுத்து சிறிநேசன் மற்றும் வைத்தியர் இளையதம்பி சிறிநாத் ஆகியோர் கலந்துகொண்டனர். இவர்களுடன் உள்ளூராட்சி மன்றத் தலைவர்களான இந்திரன் ரூபசாந்தன் (நாவிதன்வெளி), சுப்பிரமணியம் பாஸ்கரன் (காரைதீவு) மற்றும் தர்மதாஸ ஆரியதாஸ (ஆலையடி வேம்பு) ஆகியோரும் பங்கேற்றுத் தூதுவருடன் கலந்துரையாடினர்.

இக்கலந்துரையாடலின் போது பிரதேச சபை தவிசாளர்கள், தூதுவரிடம் பிரதேச மக்களின் குறைபாடுகளை தூதுவர் இசபெலா மார்டினின் கவனத்திற்கு கொண்டு வந்தார்கள் யுத்தம் நிறைவடைந்த பின்னரும் தமது பிரதேசங்கள் அபிவிருத்தியில் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதாகவும், திட்டமிட்ட ரீதியில் பாரபட்சம் காட்டப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இப்பிரதேச இளைஞர்களுக்கான புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், சுயதொழில் முயற்சிகளை ஊக்குவிக்கவும் சர்வதேச ஒத்துழைப்பு அவசியம் என வலியுறுத்தப்பட்டது.

உலகப் பொருளாதாரப் போக்குகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில், பின்தங்கிய பிரதேச மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்த கனேடிய அரசு போதிய உதவிகளை வழங்க வேண்டும் என தவிசாளர்கள் தூதுவரின் கவனத்திற்கு கொண்டு சென்றார்கள். பிரதேச மக்களின் வாழ்வாதாரம், கல்வி மற்றும் பொருளாதார ரீதியிலான பின்னடைவுகளைக் கேட்டறிந்த கனேடியத் தூதுவர், இக்கோரிக்கைகள் தொடர்பில் தனது கவனத்தைச் செலுத்துவதாகத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களின் தற்போதைய களநிலைவரங்களை நேரடியாகக் கேட்டறிந்த இந்தச் சந்திப்பு, இப்பிரதேசங்களின் எதிர்கால மேம்பாட்டிற்கு மிக முக்கியமானது எனப் பிரதிநிதிகள் இதன்போது தெரிவித்தனர்.

## அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர் நௌபீஸ் ஜேர்மன் பயணம்



**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் இரு வாரகால விஜயம் மேற்கொண்டு சனிக்கிழமை (02) ஜேர்மன் பயணமானார்.

ஜேர்மனில் இடம்பெறவுள்ள மாநகரங்களின் நீர் மீள்திறன் பற்றிய ஆய்வு செயலமர்வில் பங்குபற்றுவதற்காகவே அவர் அங்கு செல்கிறார்.

இந்த செயலமர்வில் ஜேர்மன் நாட்டிலுள்ள 03 மாநகர சபைகளினதும் மேலும் 05 நாடுகளில் இருந்து தலா ஒரு மாநகர சபை என்ற ரீதியிலும் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ், இரு வார காலத்திற்கான முழுமையான புலமைப் பரிசிலுக்கு தெரிவு செய்யப்பட்டதோடு, இந்த செயலமர்வைத் தொடர்ந்து சுவிஸ்லாந்து மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு ஒரு வார காலம் சுற்றுலா செல்வதற்கான வாய்ப்பையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த காலங்களில் ஜப்பான், சீனா, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கும் இவர் உத்தியோகபூர்வ பயணங்களை மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




**பாரா தாஹிர்**
**சிரேஷ்ட ஊடகவியலாளர்**

## நான்

நான் பாத்திமா ஸஹீமா. நான் பஷீர்சேகுதாவுத் பாடசாலையில் தரம் இரண்டு பீ வகுப்பில் படிக்கிறேன். எனக்கு பிடித்தமான பாடம் இஸ்லாம். எனது வகுப்பாசிரியரின் பெயர் திருமதி றிஸ்வானா ஆவார்.

எனது பாடசாலை அதிபரின் பெயர் ஜனாப் அஜிமல் கான் என்பவராவார்.

**பாத்திமா.ஸஹீமா**
**தரம்-2/B**
**ஏறாவூர்**

# சிறுவர் சித்திரங்கள்



K. R. F. Huda
தரம் 03
ஸாஹிரா மகா வித்தியாலயம்
ஹுனுபிட்டிய, வத்தளை



I M.H.M.Haseef
Grade1
Baduriya College
Mawanella



Aleeza Ijas
Glenfall preschool
Madawala

# முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

**குட்டிக்கதை**

வற்றாது ஓடிக்கொண்டிருக்கும் வளமிக்க அந்த ஆற்றின் ஒரு கரையில் பசுமையான காடுகளும் மறுகரையில் வனப்புமிகு நெல் வயல்களும் காணப்பட்டன.

என்றுமே இல்லாதவாறு இந்த வருடம் நெல் வயல்கள் செழித்து வளர்ந்திருந்தன பார்ப்பதற்குப் பச்சைப் பசேலென்று காட்சியளித்த வயலின் இடையிடையே குடலைக் கதிர் எட்டிப் பார்க்கத் தொடங்கியது. பயிர் விளைந்தால் பட்சிகளுக்குத்தானே கொண்டாட்டம்.

ஆங்காங்கே இருந்த மரக்கிளைகளை வாழ்விடங்கள் ஆக்கிக் கொண்டன பறவைகள்.

அவற்றுள் வண்ணக் கூடுகளை வடிவமைத்துத் தொங்கவிடும் வல்லமை மிக்க தூக்கணாங் குருவிகளும் ஒன்று சேர்ந்தன. ஆற்றாங்கரையில் நின்ற இரு பனை மரங்களிலும் அழகிய கூடுகளைக் கட்டின.

அவை காற்றில் அசைந்து காண்போரின் கண்களுக்கு விருந்து அளித்தன.

இப்போ வயலில் நெற்கதிர்கள் முற்றிப் பொன் நிறத்தை அடையும் தறுவாயில் இருந்தன. அந்த வேளை தான் அப்பாவிக் குருவிகளின் வாழ்விடங்களுக்கு ஆபத்து நெருங்கி வந்தது.

வயலைப் பார்வையிட வந்த செய்கைக் காரன் ஒருவனின் கண்களில் அந்தத் தூக்கணாங்குருவிக் கூடுகள் துரதிஷ்ட வசமாகத் தென்பட்டன.

அவனது கழுகுப் பார்வையில் கண்காட்சிக் கூடமான பனைமரத்துக் கூடுகள் அழிவை எட்டின.

உடனே அவன் அவசரமாக வீட்டுக்குச் சென்று ஒரு நெடிய மூங்கிலின் முனையில் ஒரு கத்தியைக் கட்டி எடுத்து வந்தான்.

ஆசையோடு கூடமைத்து பெண் குருவிகளின் வருகைக்காகக் காத்திருந்த ஆண் குருவிகளின் ஆசை இல்லங்களை ஒவ்வொன்றாக அறுத்து எறிந்தான்.

அறுத்தெறிந்த வேகத்தில் வீடுசெல்லத் தீர்மானித்தவன் எதையோ சாதித்த பெருமிதத்துடன் கத்திக் கம்பினைத் தோளில் சுமந்தபடி நடக்கலானான்.

அந்த வழியால் குளிக்கச் சென்ற ஒருவர் இது என்ன கத்திக் கம்பு எதற்காக என வினவியபோது வெள்ளாமை காய்ப் பருவமாயிற்று பால் பிடித்த கதிர் மணிகளைக் கண்டால் இந்தக் குருவிகள் விடாது வெறும் வைக்கோல் தான் இருக்கும் . அதனால் தான் கூடுகளை அறுத்து எறிந்துவிட்டு வருகின்றேன் என்றார் .

கேள்வி கேட்ட பெரியவர் அசந்து விட்டார். கவலை கொண்டு தலையைத் தொங்க விட்டவாறு சென்று விட்டார்.

செய்கைக்காரனோ தொடர்ந்து நடந்தான். அந்தோ பரிதாபம் யானை வேலியில் கத்திக் கம்பு மாட்டிட மின்தாக்கியவன் தடாலென வீழ்ந்தான்.

பேச்சு மூச்சற்றுக் கிடந்தவனை குளிக்கச் சென்ற பெரியவர் ஓடிவந்து தூக்கினார்.



வீட்டுக்குத் தகவல் வழங்கினார். மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். மூளையில் இரத்தக் கசிவு ஏற்பட்டதால் படுத்த படுக்கையானான் வயல் செய்கைக்காரன்.

**பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின்**
**தமக்கு இன்னா பிற்பகல் விளையும்**

**ஜிப்னாஸ் யஹ்யா உமர்**
பொ ஃஅல் அஸ்ஹர் மகா வித்தியாலயம்
கல்லளை பொலன்னறுவை

**படைப்பாற்றலை ஊக்குவித்து, பொது அறிவை வளர்த்து, பொழுது போக்குடன் கல்வியறிவை வளர்த்து, சிறாரிடத்தில் வாசிப்பை ஊக்குவிக்கும் நோக்கில் “உதய பூங்கா “ எனும் சிறுவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பகுதியில் உங்கள் ஆக்கங்களை கட்டுரையாக, கவிதைகளாக, துணுக்குகளாக, விடுகதைகளாக, சிறுகதைகளாக, பிறந்தநாள் வாழ்த்தாக, சித்திரங்களாக, பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகளாக இவ் வட்சப் இலக்கத்திற்கு 0775323239 அனுப்பலாம்.**



**ஆளுமை விருத்தியை நோக்கமாக கொண்டு மாவனல்லை Ideal பாலர் பாடசாலை மாணவர்களால் கலப்படமற்ற “தக்காளி சோஸ்” ஆசிரியை சனா ஹனீபா தலைமையில் தயாரிக்கப்பட்டதை இங்கு காணலாம்.**

## My Happy Day!

One night, before I went to sleep, I had only one wish in my mind, I wanted to have a pet bird.

The next morning, when I woke up, I went to the kitchen and saw my mother preparing some milk. I asked her, “Mom, why are you making milk?”

She smiled and said, “This is not for you. It’s for our new pet birds.”

The moment I heard those words, my face lit up with happiness, and I couldn’t stop smiling.

Then I went outside. There was a small cage with two beautiful little birds inside. I was so excited and amazed to see them. My siblings and I started taking care of them together. We fed them, watched them, and spent time with them happily.

**Thayyiba Fauhan**
Grade 4-D
Baduriya central college
Mawanella.

# அறிவுக் கடல் இமாம் கஸ்ஸாலி



ஆன்மீக ஞானியான இமாம் கஸ்ஸாலி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் ஒரு முறை மாணவர்களிடம் ஆறு கேள்விகளை கேட்டார்கள் மாணவர்களும் அவர்களு-க்கு தெரிந்த பதில்களை சொன்னார்கள். இமாம் அவர்களும் தங்களுடைய பதிலை கூறுவார்கள். இமாம் அவர்கள் பக்தாத்-தில் இருந்த உலகப்புகழ் பெற்ற நிஜாமியா பல்கலை கழகத்தில் பேராசிரியராக இருந்த போது மாணவர்கள் ஏதாவது கேள்வி கேட்ட-ால் பதிலாக ஒரு புத்தகமே பதிலாக எழுதி கொடுப்பார்களாம். மாணவர்கள் கேட்ட கேள்விகளில் ஒன்றையும் பதில்களையும் இன்று நாம் பார்ப்போம்.

“இவ் உலகில் நமக்கு மிகவும் நெருக்கமானது எது? இது தான் கேள்வி. இதற்கு மாணவர்கள் பெற்றோர், மனைவி, கணவர், குழந்தைகள், நண்பர்கள் என பலவாறு பதில் அளித்தார்கள்.

இதற்கு இமாம் அளித்த பதில் உங்கள் பதில்கள் எல்லாம் சரி தான் என்றாலும் மிகச் சரியான பதில் அதுவல்ல. மிகச் சரியான பதில்”இறப்பு “என்பது தான் என்றார். ஏனென்றால் உயிர் வாழ்பவர்கள் அனைவரும் நிச்சயம் ஒரு நாள் இறந்து போவார்கள் என்று அல்லாஹ் சூரா ஆல இம்ரானின் 185 ஆவது வசன-த்தில் கூறியுள்ளான் என்றார்கள். நாமும் சிந்தித்து நெருக்கமான இறப்புக்குரிய ஆயத்தங்களுடன் எந்த நேரமும் இருக்க வேண்டும் என்பதை சிந்தனையில் எடுப்போம்.

# நாவிதன்வெளியில் டிட்வா புயலினால் பாதிக்கப்பட்ட உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகைக்கான காசோலைகளை வழங்கி வைப்பு




(ஏ.எச்.எம்.ஹாரீஸ் - மத்திய முகாம் செய்தியாளர் )

கடந்த வருடம் (2025) ஏற்பட்ட டிட்வா புயல் மற்றும் வெள்ள அனர்த்த நிலைமைகளின் காரணமாக நாவிதன்வெளி பிரதேசத்தில் பகுதியளவில் சேதமடைந்த வீடுகளின் உடமையாளர்களுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு நாவிதன்வெளி பிரதேச செயலக கூட்டமண்டபத்தில் (28) இடம்பெற்றது.

தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையத்தினூடாக வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகைக்கான காசோலைகளை நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ராகுலநாயகி சஜிந்ரன் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கிவைத்தார்.

இந்நிகழ்வில், நாவிதன்வெளி பிரதேச செயலக கணக்காளர் க. றிஸ்வி யஹ்சர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திலகராணி கிருபைராஜா ஆகியோருடன் சமூக சேவை உத்தியோகத்தர், கிராமிய அபிவிருத்தி, குடியேற்ற, மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புத்தளம் பாத்திமா பாடசாலையில் புதிய கணனி கூடம் திறந்து வைப்பு





(எம்.எச்.எம்.சியாஜ்)

புத்தளம் பாத்திமா பாலிகா மகா வித்தியாலயத்தின் கணனி கூடம் திறப்பு விழா பாடசாலையின் அதிபர் ஏ.எல் செரினா பர்வின் தலைமையில் (28) இடம்பெற்றது.

நிகழ்வில் டெக்நோசிட்டி மற்றும் லெப்டப்.எல்கே நிறுவனத்தின் தலைவர் மொஹமட் இஸ்மாயில் பவுமி, தலைமை பராமரிப்பு அதிகாரி ஹேமல் சந்திரரட்ன, விற்பனை முகாமையாளர் மொஹமட் கலீம் உள்ளிட்ட குழுவினர், வடமேல் மாகாண கல்விப்பணிப்பாளர் ஜே.ஏ.எம். பி. ஜயதிலக்க, வடமேல் மாகாண கணனி பாட பிரதிக் கல்விப் பணிப்பாளர் அநுராதா இலன்கோன், புத்தளம் வலய கல்விப்பணிப்பாளர் ஆர்.எம்.டி. என் பிரஷாட் , புத்தளம் வலய கணனி பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஐ.எம் நௌஷாட் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

சுமார் 6 மில்லியன் ரூபா பெறுமதியான 21 கணனிகள் , 21 தளபாடங்கள் உள்ளடங்கிய கணனி கூடம் கிடைக்கப்பெற்றமை ஊடாக பாடசாலை கணனி பாட மாணவர்களின் தகவல் தொழிநுட்ப அறிவை மேலும் மேம்படுத்தி அவர்களின் டிஜிட்டல் உலக பயணத்திற்கு பெரும் துணையாக அமையும் என்பதுடன் இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய சகலருக்கும் பாடசாலை நிர்வாகம் சார்பில் தமது நன்றிகளையும் அதிபர் தெரிவித்தமையும் குறிப்பிடத் தக்கது.

# தம்பலகாமத்தில் புதிய வீடுகளை அமைப்பதற்கான அங்குரார்ப்பண வைபவம்





( ஏ.எச். ஹஸ்பர்)

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவில் வரிய குறைந்த வருமானம் பெறும் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கான வீடமைப்பு திட்ட அங்குரார்ப்பண வைபவம் (02) இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் க.சதிசேகரன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரொசான் அக்மீமன கலந்து சிறப்பித்தார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மூலமாக அமுல்படுத்தப் படும் குறித்த திட்டம் ஊடாக எட்டு வீடுகள் தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவில் வழங்கப்படவுள்ளது. ஒவ்வொரு வீடும் தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியானது. முதற்கட்டமாக ஒன்றரை இலட்சம் ரூபாவுக்கான காசோலை வழங்கப்பட்டுள்ளது. பொற்கேணி, தம்பலகாமம், முள்ளிப்பொத்தானை கிழக்கு, மீரா நகர் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் முதற்கட்டமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதில் வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் ,தேசிய மக்கள் சக்தியின் பிரஜா சக்தி உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மூன்று தசாப்த காலம் ஊடகப் பணி செய்து வரும் ஊடகவியலாளர் எம்.ஏ.முகமட்



(எம்.எஸ்.எம்.ஷஜஹான்)



திருகோணமலை மாவட்டம் கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட் பட்ட றகுமானியா நகர் கிராம சேவகர்பிரிவில் 30, துறையடி வீதியில் வசித்து வரும் முகம்மது அலி-முகமட் அனுபவமுள்ள ஊடகவியலாளராவார்.

தனது ஊர்ப்பிரச்சினைகளை கடந்த 1999 ஆண்டு வீரகேசரி பத்திரிகையில் எழுத ஆரம்பித்தார். அதனைத் தொடர்ந்து நேயம், தினச்சுடர்,நவமணி ஆகிய பத்திரிகைகளில் பிராந்திய நிருபராகவும் கடமையாற்றினார். தமிழன் பத்திரிகையின் பிராந்திய நிருபராகவும் கடமையாற்றி வருகிறார்.2011©2021ஆம் ஆண்டு வரை விடிவெள்ளி மற்றும் 2021-2022 ஆண்டு வரை தினகரன் போன்ற பத்திரிகைகளிலும் மெட்ரோ லீடர் மற்றும் இம்போர்ட் மிரர்,உதயம் மின்னிதழ் பத்திரிகை ஆகிய இணையத் தளங்களிலும் திருகோணமலை மாவட்டத்தில் நடை பெற்று வரும் சமூகப் பிரச்சினைகள், கலாசார, சமய, அரசியல், இலக்கிய நிகழ்வுகள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் என பல்வேறு துறைகளிலும் எழுதினார்.

ஊடகத்துறையில் மட்டுமன்றி நாடகத் துறையிலும் தனது திறமைகளை வெளிக் காட்டி வருவதோடு பல ஊடக செயலமர்வுகளில் பங்குபற்றியுள்ளார். கிண்ணியா பிரதேச செயலக கலாசார அதிகார சபையினால் மேற் கொள்ளப் பட்ட அனைத்து கலாசார செயற்பாடுகளிலும் தனது பங்களிப்பை வழங்கி வருகின்றார். இவர் கடந்த 2023 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரை உபசெயலாளராகவும்,2024 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் 2026ஆம் ஆண்டு வரை கலாசார அதிகார சபையின் பொருளாளராகவும் கடமையாற்றி வருவதோடு,ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் உறுப்பினராகவும், திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் உறுப்பினராகவும் செயல்பட்டு வருகின்றார்.

2024ஆம் ஆண்டு கிழக்கு மாகாண பணபாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப் பட்ட கலை இலக்கிய அறிவுப் போட்டி,2025ஆம்ஆண்டு கலைஞர் ஒன்றுகூடல் நிகழ்வு மற்றும் செயலமர்வுகளில் இவர் பங்குபற்றியுள்ளார்.

2014ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் 10ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கிழக்கு மாகாண அமைச்சர் உதுமாலெவ்வை இவருக்கு சிரேஷ்ட ஊடக விருது வழங்கி கௌரவிக்கப் பட்டார்.2024ஆம் ஆண்டு முன்னோடிகள் கலை இலக்கிய வட்டத்தினால் பொன்னொளி விருதும் ,2024-12-25ஆண்டு திருகோணமலை மீடியா போரத்தினால் ஊடக விருதும் வழங்கி கௌரவிக்கப்ப் பட்டமை குறிப்பிடத் தக்கது.

கலைப் பட்டதாரியான இவர் அகில இலங்கை சமாதான நீதவானாகவும் செயல்பட்டு வருகின்றார்.

# மக்களின் தீர்ப்புக்கு தலைவணங்குகிறோம்

## மு.க.ஸ்டாலின்



மக்கள் தீர்ப்பைத் தலைவணங்கி ஏற்கிறோம். வெற்றி பெற்றவர்களுக்கு வாழ்த்துகள் என முதல்வர் ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

தமிழக சட்டசபை தேர்தலில் கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்ட முதல்வர் ஸ்டாலின் தோல்வி அடைந்தார். இந்த சூழலில் சமூக வலைதளத்தில் முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது, கடந்த ஐந்தாண்டு காலத்தில் ஏராளமான திட்டங்களை உருவாக்கி, தமிழக மக்களுக்கு நல்லாட்சியை வழங்கினோம். தமிழகத்தை அனைத்து வகையிலும் உயர்த்தினோம். தேர்தல் களத்தில் எங்களது சாதனைகளைச் சொல்லியே ஓட்டுகளைக் கேட்டோம்.

மக்களுக்குச் செய்து கொடுத்த நலத்திட்டங்கள் தொடருவதற்கு ஓட்டு கேட்டு நாங்கள் பிரசாரம் செய்தோம். திமுக தலைமையிலான மதர்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை ஆதரித்து ஓட்டளித்த தமிழக மக்கள் அனைவருக்கும் நான் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வாக்களித்தவர்களுக்கு மட்டுமல்ல, வாக்களிக்க மறந்தவர்களுக்கும் சேர்த்தே ஆட்சி நடத்தினேன். அனைத்து மக்களுக்கும் உண்மையாக இருந்தேன். நான் எனது மனச்சாட்சிப்படியே செயல்பட்டேன்.

நான் எனது சக்தியை மீறி உழைத்தேன். என்னைப் போன்றே களத்தில் உழைத்த கட்சியினர் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றி, எங்களோடு தோளோடு தோள் நின்ற கூட்டணி கட்சி தலைவர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் அனைவருக்கும் நன்றி, எனது அரசியல் பொதுவாழ்வில் அதிகப்படியான வெற்றியையும் பார்த்துள்ளேன், தோல்விகளையும் சந்தித்துள்ளேன்.

எனவே லட்சியமும் கொள்கையும் தான் முக்கியமே தவிர, வெற்றி தோல்விகள் மட்டுமல்ல என்று செயல்படக்கூடியவன் நான், அதனால் திமுகவின் அரசியல் பயனம் தொய்வில்லாமல் தொடரும். இதுவரை மக்களுக்காகச் சிறப்பான ஆளும்கட்சியாகச் செயல்பட்ட தி.மு.க ,னி சிறப்பான எதிர்க் கட்சியாகச் செயல்படும். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

# ஸ்டாலின் தோல்வி:ஏனைய மாநில முதல்வர்கள் வெற்றி



இந்தியாவில் தமிழ்நாடு, கேரளம், புதுச்சேரி, அசாம் மற்றும் மேற்கு வங்க மாநிலங்களில் இன்று காலை 8 மணி முதல் வாக்கு எண்ணிக்கை நடைபெற்று வருகின்றது.

வாக்கு எண்ணிக்கை பல இடங்களில் முடிவுற்ற நிலையில் 5 மாநில முதல்வர்களின் வெற்றி விவரங்கள்கீழே:

**1. தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் - தோல்வி**

தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் கொளத்தூர் தொகுதியில் 4ஆவது முறையாகப் போட்டியிட்ட நிலையில் 74,202 வாக்குகள் பெற்று தமிழக வெற்றிக் கழகத்தின் வேட்பாளர் வி.எஸ்.பாபுவிடம் 8,795 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்.

தமிழ்நாட்டில் ஆளும் திமுக அரசைப் பின்னுக்குத் தள்ளி விஜய்யின் த.வெ.க. பெரும்பாலான இடங்களில் முன்னிலை வகித்து வருகின்றது.

**2. கேரள முதல்வர் பினராயி விஜயன் - வெற்றி**

கேரள முதல்வர் பினராயி விஜயன் தர்மடம் சட்டப்பேரவைத் தொகுதியில் 85,614 வாக்குகள் பெற்று 19,247 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். முதல்வராக தொடர்ந்து கடந்த 3 தேர்தல்களிலும் பின்ராயி வென்றுள்ளது.

கேரளத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான ஆட்சியை வீழ்த்தி காங்கிரஸ் ஆட்சியைப் பிடித்துள்ளது.

**3. புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி - வெற்றி**

புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி தட்டாஞ்சாவடி, உப்பளம் என இரு தொகுதிகளில் போட்டியிட்ட நிலையில் தட்டாஞ்சாவடி தொகுதியில் 10,024 வாக்குகள் பெற்று 4,441 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

மங்களம் தொகுதியில் தொடர்ந்து முன்னிலையில் இருந்து வருகிறார். புதுச்சேரியில் என்.ஏர்.காங்கிரஸ் கட்சி தனது ஆட்சியைத் தக்க வைத்துள்ளது.

**4. அசாம் முதல்வர் ஹிமந்த விஸ்வ சர்மா - வெற்றி**

அசாம் முதல்வர் ஹிமந்த விஸ்வ சர்மா ஜலுக்பரி தொகுதியில் போட்டியிட்ட நிலையில் 1,26,000-க்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்று 89,000-க்கும் மேற்பட்ட வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளார்.

அசாமில் பெரும்பான்மை இடங்களில் வென்று பாஜக தனது ஆட்சியைத் தக்க வைத்துள்ளது.

**5. மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி - நிலுவை**

மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி போட்டியிட்ட பவானிபூர் தொகுதியில் வாக்கு எண்ணிக்கை முடிவடைய உள்ள நிலையில் மிக குறைந்த வாக்கு வித்தியாசத்தில் மம்தாவுக்கும், அவருக்கு எதிராகப் போட்டியிட்ட பாஜகவின் சுவேந்து அதிகாரிக்கும் இடையே கடுமையான போட்டி நிலவி வருகின்றது.

மேற்கு வங்கத்தில் 200 இடங்களுக்கு மேல் முன்னிலையில் உள்ள பாஜக, ஆளும் திரிணாமூல் காங்கிரஸ் கட்சியை வீழ்த்தியுள்ளது.



வெற்றிக்குப் பிறகு பெற்றோரை சந்தித்த விஜய்

# தமிழக சட்ட மன்றத்தில் 10 முஸ்லிம் எம்.எல்.ஏ.க்கள்

தமிழக சட்டமன்றத்திற்கு இம்முறை 10 முஸ்லிம் எம்.எல்.ஏக்கள் (MLA) தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஆறு ஆடுயுக்கள் திராவிட முன்னேற்றக் கழக கூட்டணியிலும் நான்கு முஸ்லிம் ஆடுயுக்கள் தமிழக வெற்றி கழகத்திலும் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.




# பலஸ்தீன் தூதுவர் பவுசருடன் கொழும்பில் சிறப்பு சந்திப்பு





பலஸ்தீனத்திற்கான இலங்கை தூதுவராக நியமனம் பெற்றுள்ள முஹம்மது பவுசர் அவர்களை கௌரவிக்கும் வகையில் கொழும்பில் சிறப்பு சந்திப்பு ஒன்று இடம் பெற்றது.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வு, அவரது நீண்ட கால சேவை மற்றும் திறமைகளை மதிக்கும் ஒரு முக்கிய தருணமாக அமைந்தது.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளன தலைவர் ஷாம் நவாஸ் தலைமயில் பதில் செயலாளர் .இசட். எப்,அஹமது பர்ஹன் அமைப்பின் முன்னாள் தலைவர்களான இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், சட்டத்தரணி என். எம். ஷஹீட்,சட்டத்தரணி ரஷீத். எம். இம்தியாஸ், பிரதி தலைவர் நிஹால் பாரூக், பொருளாளர் எம். எச். எம். இஹ்சான்,உதவி செயலாளர் நளீர் அஹமத்,மேல் மாகாண பணிப்பாளர் ரிஸ்மி மஹ்ரூப், அமைப்பின் உயர் பீட உறுப்பினர்களான சட்டத்தரணி ருஷ்தி ஹபீப்,நஸ்ரான் உள்ளிட்ட பலரும் இதன் போது பிரசன்னமாகியிருந்தனார்.

முஹம்மது பவுசர் அவர்கள் புதிய பொறுப்பை ஏற்று பலஸ்தீனத்திற்கு தூதுவராகப் பயணிக்கும் இந்த தருணத்தில், அவரது பணிகள் வெற்றிகரமாக அமைய இறைவனை பிரார்த்திக்கின்றோம். மேலும், இலங்கை மற்றும் பலஸ்தீன நாடுகளுக்கிடையேயான நட்பு மற்றும் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில் அவர் சிறப்பாக செயல்படுவார் என்ற நம்பிக்கையையும் வெளியிடுகின்றோம்.

அவரது புதிய பொறுப்பில் சிறந்த சாதனைகள் படைத்து, நாட்டிற்கு பெருமை சேர்க்க வேண்டுமென இதன் போது வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. இலங்கையிலிருந்து பாலஸ்த்தீனத்திற்கு தூதுவராக செல்லும் பவுசருக்கு நினைவுச் சின்னம் ஒன்றும் அமைப்பினரால் இதன் போது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





அரபாத் பஹுர்தீன்

# இலங்கை கிரிக்கெட்

# நிர்வாக அமைப்பை முழுமையாக மறுசீரமைக்க வேண்டும்

## புதிய தலைவர் எரான் விக்ரமரத்ன

இலங்கை கிரிக்கெட் சபையின் புதிய மறுசீரமைப்புக் குழுவின் முதல் இலக்கு, “இலங்கை கிரிக்கெட் நிர்வாக அமைப்பை முழுமையாக மறுசீரமைத்து, அதனுடன் புதிதாக முன்மொழியப்பட்ட யாப்பை செயல்படுத்துவதாகும்” என அதன் தலைவர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் சபை தலைவர் ஷம்மி சில்வா மற்றும் நிறைவேற்றக் குழு பதவி விலகியதை அடுத்து விளையாட்டுத் துறை அமைச்சர் சுனில் குமார கமகே, இந்த மறுசீரமைப்புக் குழுவை நியமித்துள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான எரான் விக்ரமரத்ன தலைமையிலான இந்தக் குழுவில் முன்னாள் கிரிக்கெட் வீரர்கள், நிர்வாகிகள் மற்றும் சட்ட நிபுணர்கள் அடங்கிய ஒன்பது பேர் இடம் பெற்றுள்ளனர்.

குறிப்பாக முன்னாள் கிரிக்கெட் வீரர்களான ரொஷான் மஹானாம, குமார் சங்கக்கார, சிதத் வெத்தமுனி ஆகியோருடன் துஷிர ரதல்ல, அவன்தி கலம்பனே, பிரகாஷ் ஷாப்டர், உபுல் குமாரப்பெரும மற்றும் டினால் பிலிப் ஆகியோரும் அடங்குகின்றனர்.

இந்தக் குழுவில் பிரதான இரு மறு சீரமைப்பு திட்டங்கள் குறித்தும் எரான் விக்ரமரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறந்த நிர்வாகத்தை அமைத்தல் மற்றும் களத்தில் சிறந்த செயல்திறன் என்ற அடிப்படையில் இந்த மறுசீரமைப்பு பணிகள் விரைவாக இடம்பெறும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மறுசீரமைப்புகளின் பின்னர் விரைவாக இலங்கை கிரிக்கெட் அணி கடந்த காலத்தை போன்று சிறப்பான வெற்றிகளை பெறும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பிபா உலகக் கிண்ணம்: டிக்கெட் விலைகளில் மாற்றம்




பிபா எனும் அனைத்துலகக் காற் பந்துச் சம்மேளனம் இந்த ஆண்டு நடக்கவிருக்கும் உலகக் கிண்ணக் காற்பந்துப் போட்டிகளுக்கான நுழைவுச்சீட்டு விலையை மறுபரிசீலனை செய்யப்போவதாகத் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டுப் போட்டிகளின் நுழைவுச்சீட்டு விலை குறித்து ரசிகர்கள் கொந்தளித்ததைத் தொடர்ந்து அந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

அமெரிக்கா, கனடா, மெக்சிகோ ஆகிய 3 நாடுகள் இணைந்து இந்த ஆண்டு இத் தொடரை நடாத்துகின்றன.

இறுதிச் சுற்றுக்கான நுழைவுச்சீட்டுகள் மில்லியன் கணக்கான டொலருக்கு மறுவிற்பனை செய்யப்படுவதாகச் சிலர் குறைகூறினர்.

ஐரோப்பியக் காற்பந்து ரசிகர் மன்றம் நுழைவுச்சீட்டு விலை கொள்ளையடிப் பதற்குச் சமம் என்று சாடியுள்ளது. பிபாவுக்கு எதிராக வழக்கும் தொடுத்துள்ளது.

அதிகத் தேவை இருப்பதைக் கட்டணங்கள் பிரதிபலிப்பதாய் பிபா குறிப்பிட்டது. ரசிகர்களின் கருத்துகளைக் கேட்டிருப்பதாகவும் எதிர்காலத்தில் விலை மாற்றம் செய்வது பற்றி ஆராய்வதாகவும் பிபா நிருவாகம் கூறியிருந்தது.

உலகக் கிண்ணக் காற்பந்துப் போட்டிகளின் வழி 13 பில்லியன் டொலர் (சுமார் 16.5 பில்லியன் வெள்ளி) ஈட்டலாம் என்று பிபா எதிர்பார்க்கிறது. உலகளவில் காற்பந்தை மேம்படுத்து வதற்கு அந்தத் தொகை முதலீடு செய்யப்படும் என்றும் அது தெரிவித்தது.

# ஆசிய ஈட்டி எறிதல் சம்பியன்ஷிப்

## சுமேதவுக்கு வெள்ளிப்பதக்கம்



தென் கொரியாவில் நடைபெற்று வரும் ஆசிய எறிதல் சம்பியன்ஷிப் தொடரின் ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்று சுமேத ரணசிங்க சாதனை படைத்துள்ளார்.

இப்போட்டியில் அவர் 75.61 மீட்டர் தூரத்தை எட்டி இந்த வெற்றியைப் பதிவு செய்துள்ளார்.

ஆசிய எறிதல் சாம்பியன்ஷிப் விளையாட்டுப் போட்டிகள் கடந்த 02 ஆம் திகதி தென் கொரியாவில் தொடங்கின.

# மெட்ரிட் ஓபன் டென்னிஸ் தொடர்: சம்பியன் மகுடம் சூடினார் மம்தா கொஸ்டியுக்



மெட்ரிட் ஓபன் டென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டியில் 6:3, 7:5 என்ற நேர் செட்களில் ரஷ்யாவின் மீரா அண்ரீவாவை வீழ்த்தி சம்பியன் மகுடத்தை தனதாக்கினார் உக்ரைனின் மம்தா கொஸ்டியுக்.

உலகின் புகழ் பெற்ற டென்னிஸ் தொடர்களில் ஒன்றாக மெட்ரிட் ஓபன் டென்னிஸ் தொடர் ஸ்பெய்னின் மெட்ரிட் நகரில் இடம்பெற்று வருகின்றது. கடந்த 20 ஆம் திகதி ஆரம்பித்த இத் தொடரில் ஆடவர் மற்றும் மகளிர் ஒற்றையர், ஆடவர் மற்றும் மகளிர் இரட்டையர் அதேபோல் களப்பு இரட்டையர் என்ற பிரிவுகளில் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் நேற்று (2) இடம்பெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவில் இறுதிப் போட்டியில் முன்னிலை வீராங்கனையான ரஷ்யாவின் மீரா அண்ரீவாவை உக்ரைனின் மம்தா கொஸ்டியுக் எதிர்த்தாடினார். விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் அதிரடி காட்டிய மம்தா கொஸ்டியுக் 6:3 என கைப்பற்றி தன் ஆதிக்கத்தை நிலைநாட்டினார்.

பின்னர் இடம்பெற்ற தீர்மானிக்க இரண்டாவது செட்டில் சுதாகரித்துக் கொண்ட மீரா அண்ரீவா எதிர் தாக்குதல் நடாத்தினார். இருப்பினும் வேகமான ஆட்டத்தை வெளிப்படுத்திய மம்தா கொஸ்டியுக் 7:5 என 2ஆவது செட்டையும் தனதாக்க விறுவிறுப்பான இறுதிப் போட்டி 6:3, 7:5 என்ற நேர் செட் கணக்கில் உக்ரைனின் மம்தா கொஸ்டியுக் வசமாக நடப்பு ஆண்டின் மெட்ரிட் ஓபன் மகளிர் ஒற்றையர் பிரிவின் சம்பியன் மகுடத்தை தனதாக்கி அசத்தினார்.

# வங்கதேச மகளிர் அணிக்கு எதிரான ரி20 தொடர் வெள்ளையடித்துக் கைப்பற்றியது இலங்கை

பங்களாதேஷ் மகளிர் அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரின் 3ஆவதும் இறுதியுமான போட்டியில் 3 ஓட்டங்களால் திரில் வெற்றி பெற்ற இலங்கை மகளிர் அணி தொடரை 3:0 என வெள்ளையடித்துக் கைப்பற்றி அசத்தியது.

இரு நாடுகளுக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரின் முதல் இரு போட்டிகளிலும் இலங்கை மகளிர் அணி வெற்றி கொண்டு ஒரு போட்டி மீதமிருக்க தொடரை கைப்பற்றியிருந்தது.

இந்நிலையில் இத் தொடரின் 3ஆவதும் இறுதியுமான போட்டி பங்களாதேஷின் சில்ஹெட் (Sylhet) நகரில் ஆரம்பமாக இருக்கையில் மழை குறுக்கிட்டமையால் போட்டி 09 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி, நிர்ணயிக்கப்பட்ட 09 ஓவர்களில் 06 விக்கெட்டுகளை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றக் கொண்டது. துடுப்பாட்டத்தில் அணித் தலைவி சமரி அத்தபத்து 41 ஓட்டங்களையும், இமேஷ்ஷா 19 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சுல்த்தானா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.




பின்னர் 88 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் மகளிஅர அணியால் 09 ஓவர்களில் 06 விக்கெட்டுகளை இழந்து 84 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது. துடுப்பாட்டத்தில் சோபனா மொஸ்டரி 21 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் இலங்கை மகளிர் அணி சார்பில் சுகந்திகா குமாரி மற்றும் சமரி அத்தபத்து ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

இதனால் இலங்கை மகளிர் அணி 3 ஓட்டங்களால் திரில் வெற்றியைப் பதிவு செய்ததுடன் 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரை 3:0 என வெள்ளையடித்துக் கைப்பற்றியது. இப் போட்டியில் நாயகியாகவும், இத் தொடரின் நாயகியாகவும் இலங்கை மகளிர் அணியின் தலைவி சமரி அத்தபத்து தெரிவானமை குறிப்பிடத்தக்கது.